www.padippakam.com




வேலணை ம.ம.வி. பழையமாணவர் சங்க
பிரெஞ்சுக்கிளையின்
5வது ஆண்டு விழாச் சிறப்பிதழ்

# வித்தியாலயம்

28. 06. 1998, பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com



www.padippakam.com

# வித்தியாலயம்

வேலணை மத்தியமகாவித்தியாலய ப. மா. சங்க பிரான்ஸ்கிளையின்
ஐந்தாவது ஆண்டு நிறைவுவிழா சிறப்பு மலர்.

## 1998

மலர்க்குழு
திரு. க. கருணாநிதி
திரு. அ. தேவதாஸ்
திரு. யா. பத்மநாதன்
திரு. ப. சுந்தரலிங்கம்

கணணி எழுத்துப்பதிவு :
யா. பத்மநாதன்
ப. கந்தப்பிள்ளை
க. சிவகரன்

ஓவியங்கள் :
அ. தேவதாஸ்

வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா அச்சகம்

எமது மகாவித்தியாலயத்தின் ஜாதகம் இது.

பிரான்ஸில் எமது பழைய மாணவர் சங்கத்தின் இயக்கத்திற்கு அகவை ஐந்து ஆகிறது. அமளி, துமளி இன்றி அமைதியாகச் செயற்பட்டுக்கொண்டிருந்தது. இந்த நிறைவுவிழாவைக் கொண்டாடுவதிலும் இம்மலரை வெளியீடுவதிலும் தன்னை வெளிப்படுத்தி நிற்கின்றது.

எமது கல்லூரி 95 நவம்பரில் யாழகத்தில் இயங்கும் போது தனது பொன்விழாவைக் கொண்டாட திட்டமிட்டிருந்தது.

ஒக்டோபரில் குடாநாடு வன்னிக்கு புலம் பெயர்ந்தபோது அவை எல்லாம் கனவாகக் கலைந்து போயின. அந்தக்கனவை நனவாக்குவதாக அமையாவிட்டாலும் ஒரு எத்தனிப்பாக அமைகிறது.

இந்த விழா தேவையா? சிறப்பு மலர் தேவையா? என்ற கேள்வி பலரிடம் எழுகிறது. இங்கே எமது பிள்ளைகளுக்கு ஜாதகம் எழுதுகிறோம் இல்லையா? பிறந்த நாள் விழா நடாத்துகிறோம் இல்லையா? அதேபோலத்தான் இந்த விழாவும், மலரும். இச்சிறுமலர் எமது கல்லூரியின் வரலாறுகளையும் இறந்தகாலங்களை உள்ளடக்கிய ஆவணப்பதிவு. இது எமக்கு ஜாதகம் போன்றது.

எமது கல்லூரி சார்பாக வெளியிடப்படும் முதல் மலர் இதுவாகத்தானிருக்கும்.

எழுபதுகளின் பின் கல்லூரிப்பாடங்களை அதே நாளில், அதே ஆசிரியர்களால் ரியூசனில் படிப்பிக்கும் (பிழைப்பு) காலத்திற்குமுன் கல்வியில் உயர்ந்தவர்கள் இயல்பான சுயாதீனங்களால் முன்னேறியவர்கள் பலர்.
அத்தகைய கலைக்கோயிலை இச்சிறுமலரூடாக நினைவுகொள்ளல் பயன்மிக்கதும் பெறுமதிமிக்கதுமாகும். அறிதல், தேடல், அடைதல், எத்துணை பெறுமதியானது.



படிப்பகம்

www.padippakam.com

அருமையானது. வரலாறுகளை அறிதல். மிகமுக்கியமானது.

கருத்து. கருத்து என்று கருகிப்போன வெங்காயத்தில் கருத்துத் தேடுகின்ற கருத்தியாளர்கள்.
சொல்வார்கள். சொல்லியதைக்கேட்டல் வரலாறு அல்ல. என்றும் வரலாறுகள் ஆராய்ந்து அறிந்து கொள்ள வேண்டுமென்றும்.

சொல்லிய வரலாறு சொன்னவர் இருப்பு. பாதுகாப்பு. நலன். புகழ் சார்ந்தவையாகவே இருக்குமாம். அவர் சார்புத்தன்மையான விடயங்கள் வரலாறு அல்ல. வரலாற்று ஆராய்வால் புதிய கருத்துவாக்கத்தை உருவாக்கலாமே ஒழிய வரலாற்றை மாற்ற முடியாது. வரலாறு வரலாறுதான்.

நம்மை அறிதல் நாளைய அறிதலும் நேற்றைய அறிதலிலிருந்தே தோன்றுகின்றன. எமது கல்லூரியின் <வித்தியாலயம்> ஜாதகத்தைப் புரட்டிப்பார்ப்போம். நம்மையும். நமதையும் தெரிவோம். நாளை நமதாகும் வேளைவரைக்கும் நாம் நாமாக இருப்போம். வட்டி. சீட்டு. என்ற எமது <பரிணாம வளர்ச்சியில்>? தொலைந்து போகா வண்ணம் ஒன்றுகூடவும். பேசவும் இம்மலர் பாதையாகட்டும்.

இச்சிறுமலர் அவசர தயாரிப்பு. ஈழத்தில் இரண்டு மாதங்கள்வரை தபாற்சேவை வேலை நிறுத்தம் காரணமாக பல விடயதானங்கள் கிடைக்காமல் போயிற்று.
கிடைக்காமற்போனபின் விடயதாரர்களிடம் தொடர்பு கொள்ளவும் முடியாமல் போக. முடிந்தவரை அவசரமாய் வரவேண்டிய காலக்கெடு.
மலருக்கு இதழ்களாய். நறுமணமாய் மகரந்த மணிகளாய் குறியாய் அல்லி. புல்லியாய் ஆக்கங்களை அனுப்பியுதவிய எல்லா ஆக்கதாரர்களுக்கும் எம் நன்றி என்றென்றும்.

உள்ளோவியம் தந்த நாடகக் கலைஞர் அ. தேவதாஸ் கணணியில் பதிப்பித்துத் தந்த யா. பத்மநாதன். க. சிவகரன். ப. கந்தப்பிள்ளை.
வடிவாக வடிவமைத்துத் தந்த புவனன் அவர்கட்கும். மேலும் மலராக்க உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் வேலணை ம. ம வித்தியாலய ப. மா. சங்க பிரான்ஸ் கிளையினரின் நன்றிகள்.

— மலர்க்குழு



படிப்பகம்

www.padippakam.com

# தலைவரின் செய்தி

தீவுப்பகுதி மக்களின் கல்விக்காக கலங்கரை விளக்காக விளங்கி வந்தது லேணை மத்திய மகா வித்தியாலயம். 1991 சித்திரை மாதத்தில் தீவுப்பகுதி முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் தீவுப்புகுதி மக்களின் வாழ்வு மேலும் சின்னாபின்மாகியது.

இரண்டாயிரம் மாணவர்கள் வரை கல்வி கற்ற தீவுப் பகுதியின் முக்கிய கல்லூரி உட்பட மற்றைய எல்லா பாடசாலைகளில் கல்வி கற்ற மாணவர்களின் கல்வி மிகவும் பாதிப்புக்கு உள்ளானது.

இடம் பெயர்ந்த வேலணை மத்திய மகா வித்தியாலய மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு பலத்த சிரமங்கட்கும், அவலங்கட்கும் மத்தியில் சிறார்கட்கு கல்வி வசதி செய்யப்பட்டன. தீவுப் பகுதி மக்கள் முழுமையாக அகதிகளாக்கப்பட்டு அரசாங்க உதவிகள் மறுக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்காக இடம் பெயர்ந்து வெளி நாடுகளில் வாழும் மக்கள் மத்தியில் பழைய மாணவர் சங்கங்கள் அமைத்து மாணவர்களின் கல்விக்காக உதவிகள் பெறப்படுவதற்கு தாய்ச் சங்கத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ப்பட்டன.

இதற்கிணங்க காலஞ் சென்ற முன்னாள் அதிபர். திரு. சே.பொ. கேதாரநாதன் என்னுடன் 1992ல் கடித மூலம் தொடர்பு கொண்டிருந்தார். வே.ம.ம.வி. பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் அங்குரார்ப்பண கூட்டம் 08.11.1992ல் பாரிசில் இடம் பெற்றது. இவ் அங்குரார்ப்பண கூட்டத்தில் லேணை MMV யின் வழர்ச்சியிலும் மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்ட நல்லுள்ளங்கள் கலந்து கொண்டு பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டது.

சமூகத்தின் வளர்ச்சியில் கல்வி இன்றியமையாதாகும். எப்போதுமே அழியாத கல்விச் செல்வத்தை மாணவருக்கு ஊட்ட கல்லூரி பழைய மாணவர்களையும் இளஞ் சிறார்களின் கல்வியில் பற்றுக்கொண்டவர்களையும் மற்றும் நல்லுள்ளங்களையும் தொடர்ந்து ஆதரவு நல்கும் வண்ணம் பிரான்ஸ் கிளையின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

யா. பாலகிருஷ்ணன்
தலைவர்
வேலணை மத்திய மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம் — பிரான்ஸ்.



படிப்பகம்

www.padippakam.com



# போஷகரிடமிருந்து...

சொந்தமண்ணிலிருந்து புலம்பெயர்ந்து அகதிகளாய் ஐரோப்பாவில் வாழுகின்ற நாம் தேவையில்லாத பல விசயங்களில் மினக்கெட்டுக்கொண்டு தேவையான வேலைகளைப் பார்ப்பதற்கு தயக்கம் காட்டுகிறோம்.

ஈழத்தில் மக்கள் மடிந்துகொண்டிருப்பதால்தான் இங்கு இப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம். அவர்கள் தந்துகொண்டிருக்கிற வாழ்க்கைதான் இது. அவர்களது தியாகங்கள் ஒருவகையில் நமக்கும்தான். ஆகவே நாமும் அவர்களுக்காக முடிந்தவரை சிறியஅளவிலான தியாகங்களை செய்ய முன்வரவேண்டும். மற்றவர்களுக்கு நாம் விலாசம் காட்டுவதோடு நமக்குள்ளே நாம் சகமனிதர்களை நேசிப்பவர்களாக இருக்கவேண்டும்.

தாயகத்தைக் காக்கும் பணி நம்பணியாகட்டும். அந்தப்பணிகளில் கல்விப்பணியும் ஒன்று. எமது சங்கம் செய்யும் இப்பணி மேலும் தொடர மக்களது ஒத்தாசையும் உதவியும் என்றென்றும் இருக்கவேண்டும். சங்கத்தோடு நீங்கள் அனைவரும் கைகோர்த்து ஈழத்து நம் சிறார்களுக்கு கல்வியூட்ட முன்வரவேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன்.

**செ. தவவிநாயகம்**
போஷகர்,
வே. ம. ம. வித்தியாலய பழையமாணவர் சங்கம்
பிரான்ஸ்.



படிப்பகம்

www.padippakam.com

# *J/VELANAI SIR WYTHILINGAM DURAISWAMY MADHYA MAHA VIDYALAYAM*
# OLD STUDENTS' ASSOCIATION - COLOMBO

## யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் – கொழும்பு

தலைவர் / செயலாளர்.
யா/ சேர். வை. து. ம. ம. வி. வேலணை.
பழைய மாணவர் சங்கம்,
பிரான்ஸ்.

உங்களுடைய சங்கம் 5ம் வருட பூர்த்தியைக் கொண்டாடுவதை அறிந்து மிகமகிழ்ச்சியடைகின்றோம்.
எமது கல்லூரி சப்ததீவுகளுக்கும் மத்தியில் அமைந்து வழங்கிய மகத்தான சேவையை தற்பொழுது வழங்க முடியாத நிலைமையை மாற்றி அமைப்பதற்கு பழைய மாணவர்கள் சங்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். இந்த விசயத்தை கொழும்புக்கிளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்கனவே தொடர்பு கொண்டுள்ளது. 1995ம் ஆண்டு எமது கல்லூரியின் 50ம் ஆண்டு நிறைவைக் கொண்டா எமது சங்கம் எடுத்த முயற்சிகள் கை கூடாமல் போய்விட்டன. இது எமது மனதிலே என்றும் மறக்க முடியாத நிகழ்வாக அமைந்து விட்டது.

உங்கள் கிளை கல்லூரியின் அபிவிருத்திக்கும் முன் னேற்றத்துக்கும் முடிந்த உதவிகளை செய்து கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம். எமது கல்லூரியின் அதிபர் திரு. ப. தம்பு அவர்களின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட புலமைப்பரிசில் நிதியத்தில் இருந்து இவ்வாண்டு முதன் முறையாக பல்கலைக்கழகத்தில் கணிதவியல் நெறியில் கற்கும் திரு. ராசரெத்தினம் விஜயதீபனுக்கு பண உதவியை வழங்கி வருகின்றோம். மேலும், பல மாணவர்களுக்கு இந்த உதவி தேவைப்படுகின்றது. ஆனபடியால் இந்த நிதியத்திற்கு உங்கள் அங்கத்தவர்கள் மூலம் பண உதவி செய்யும்படி கேட்டுக் கொள்கின்றோம். நாம் எல்லோரும் எமது கல்லூரியின் பழைய மாணவர்கள் என எமது
நெஞ்சத்தில் ஆணித்தரமாக பதிய வைக்க வேண்டும், ஒற்றுமையாக உழைக்க வேண்டும் என வாழ்த்துகிறோம்.

<இன்னறுங்கனி சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒழித நிறுத்தல்
அன்னயாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்து
அறிவித்தல்.>

வாழ்க கல்லூரி நாமம் !
வளர்க உங்கள் சங்கம் !
வளர்க உங்கள் பணி !

இ. சுந்தரமூர்த்தி
உதவி இயக்குனர் சுங்கஇலாக



படிப்பகம்

www.padippakam.com

# செயலாளரிடமிருந்து....

புலம் பெயர்ந்தது நம்மினம் மட்டுமல்ல, உலகில் அரசியல், ஆக்கிரமிப்பு, அடிமைத்தனம் தோன்றிய நாள்தொட்டு பல்வேறு நாட்டவரும் இனத்தவரும் புலம்பெயர்ந்து கொண்டுதானிருக்கின்றனர். அந்தவகையில் நாமும் புலம்பெயர்ந்தவர்கள் தங்கள் தங்கள் நாடுகளுடனான தொடர்புகளை, அங்கு வாழ்பவர்களாகிய அவர் தம் சகோதரர்களுக்குரிய உதவிகளை தொடர்ந்து செய்துகொண்டேயிருக்கின்றனர். அத்தோடு புகுந்த இடங்களில் தங்கள் சுயாதீனங்கள், அடையாளங்கள், கலாச்சாரங்கள்அழிந்து போகாமல் காக்கவும் அமைப்புகளை நிறுவி உதவிவருகின்றனர். இப்படித்தான் நாமும் நமது கிராமத்து நம் சகோதரர்களின் கல்விவளர்ச்சிக்கு உதவும் வகையில் இங்கு பழைய மாணவர் சங்கத்தை உருவாக்கினோம்.

« ஒரு பள்ளிக்கூடம் மூடப்படும்போது ஒரு சிறைச்சாலை திறக்கப்படுகின்றது » என்கிறது ஒரு பிரெஞ்சுப்பழமொழி. இன்று ஈழத்தில் நிலமை கொஞ்சம் மிகையாக மூடப்பட்ட பள்ளிக்கூடம் இராணுவமுகாமாக மாறும் போது அங்கே இன்னொரு அகதிமுகாமும் உருவாகிறது. இராணுவமுகாமிலிருப்பவனுக்கு படிப்பிப்பது சாத்தியப்படா, ஆனால் அகதிமுகாமிலிருப்பவனுக்கு படிப்பித்தல் சாத்தியப்படும். எமது கிராமம் 1990 இறுதியில் இடம்பெயர்ந்து யாழகம் போயிருந்தது. அதன்பின் 1995 இல் நட்சத்திரங்களும் நிலவும் விழித்திருந்து காவலிருக்க நித்திரையாயிருந்த சூரியனை இடம்பெயர்த்திவைத்த ஒரு மழைநாள் இருட்டின் பின்சிதறி வன்னி என்றும் வவுனியாவென்றும் புகுந்துகொண்டது. தொடங்கிய புள்ளியில் முடியும் வட்டமாக மீண்டும் வேலணைக்கும், யாழிற்குமாகத் திரும்பிக் கொண்டிருக்கின்றது.
தானிருக்கும் கொப்பை அறியாது பறந்துபோகும் காகமாக பறந்தலைந்துகொண்டிருக்கும் மக்களுக்கு கல்வி கற்பதற்கான அடிப்படை வசதிகளைச்செய்து கொடுக்கும் நோக்கமுடன் 1992 நவம்பர் மாதம் எமது மத்திய மகாவித்தியாலய பழையமாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அப்போது எண்பத்தி ஒன்பது உறுப்பினர்கள் தாமாக வந்துசேர்ந்துகொண்டனர். இச்சங்கம் உருவாக்கும்போது எமது பாடசாலை யாழ் கொட்டடி நமசிவாயம் மகாவித்தியாலயத்தில் இயங்கிக்கொண்டிருந்தது. மாணவர் வரவு அதிகரிக்க இடம்போதாமையால் தனியாக ஓலைக்கொட்டில் போடவேண்டும் என்ற பாடசாலை நிர்வாகம் எடுத்துக்கொண்ட தீர்மானத்தின் நிமித்தம் உதவி தேவைப்பட்டது அந்த உதவியின் பொருட்டே உருவாக்கம்.

93ம் ஆண்டு ஒரு இலட்சம் ரூபாய்களை அனுப்பியிருந்தோம். அந்தத்தொகையில்தான் யாரோ தயாள சிந்தையுள்ள பெண்மணி ஒருவர் கொடுத்த காணியில் கொட்டில்கள் போடப்பட்டு இயங்கியது. அதன்பின் 95 இல் யாழ் பெயர்ந்து வன்னி போனதும் சிலகாலம் தொடர்பற்றிருந்தோம். திரும்பவும் 97ம் ஆண்டிலிருந்து வேலணை வங்களாவடி சரஸ்வதி வித்தியாசாலையில் எமது வேலணை மத்திய மகாவித்தியாலயம் புத்துயிர் பெறலாயிற்று.

தற்போது க. கணேசலிங்கத்தை அதிபராகக்கொண்டு 350 மாணவர்கள்வரை மிக நெருக்கமாக வகுப்பறைகளுக்கிடையே இடைவெளியற்று பல அசௌகரியங்களுடன் கற்கின்றனர். இவ்வருட ஆரம்பத்தில் ஐம்பதினாயிரம் ரூபாய்களை அனுப்பியிருந்தோம் கட்டிடம் கட்டவல்ல, ஆய்வுகூடம் கட்டவல்ல , கதிரை, மேசை புத்தகங்கள் வாங்கவும் கொட்டில்கள் போடவுமே. அதன் வேலைத்திட்டங்கள் பணிகள் பற்றியறிந்ததும் இனியும் மேலுள்ள தேவைகளுக்கு தொடரும்பணி...



படிப்பகம்

www.padippakam.com

பிரான்ஸ் இல் எமது சங்கம் 97ம் ஆண்டு யூன் மாதம் ஒரு ஒன்று கூடல் நிகழ்வொன்றை நடாத்தி அதில் ஒழுக்கம் என்றால் என்ன, என்பதுபற்றி ஒரு ஆய்வரங்கத்தையும் நடாத்தி பலரது சிந்தனையைக் கிளறிவிட்டிருந்தது.

பொதுப்பணி, நலன்புரி அமைப்புகள் கூட ஒருவகை போராட்டம் தான். இங்கே இழப்பு, நெருக்கம், தியாகம் சோர்வற்று மயக்கமற்று தயக்கமற்று தொடர்ந்து இயங்குதல் என்பது பெரியவிடயமே.
89 அங்கத்தவர்களுடன் ஆரம்பித்த எமது சங்கம் ஊடல், கூடல் என உறவுகள் விரிந்து சுருங்கி முகம்மாறி, முகவரிமாறி காணாமல் போனவர்கள் போக மீதியோடும் உரிமையோடு வந்து சேர்ந்தவர்களோடும் உரிமைக்குரலாக இன்று இயங்கிக்கொண்டிருக்கின்றோம்.

கல்வி அழியாச்செல்வம் என்பது எல்லோருமறிந்த ஒன்று. தமிழீழத்திலிருந்தாலென்ன சிறீலங்காவிலிருந்தாலென்ன ஒரு தமிழ்பிள்ளை படிப்பதற்கு அடிப்படைவசதியற்று கல்வியறிவற்று பூமிக்கு பாரமாக வாழ்வதை பார்த்திராது எல்லோரும் ஒருவருக்காகவும், ஒருவர் எல்லோருக்காகவும் ஓங்கிகுரல் கொடுப்போம். தாங்கவும் தாக்கவும் தயங்காது துப்பாக்கிக்குழல்களுக்குள் குடியிருக்கும் நம் சகோதரர்களுக்கு நம்மாலான உதவிகளைச்செய்ய தயாராவோம்.

தற்போது வே. ம. ம. வித்தியாலயத்திலிருந்த இராணுவம் வன்னிக்கு அழைக்கப்பட்டபின் அங்கு கடற்படையினரின் முகாமாகியிருப்பதாக பிந்திய செய்தியிலிருந்து அறிய முடிகியது.

சு. கருணாநிதி
செயலாளர் வே. ம. ம. சங்கம்
பிரான்ஸ்

# மறவாமல் நிற்கும் வைபவங்கள்

நான் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் 1956ம் ஆண்டு முதல் 1958ம் ஆண்டு வரை கல்வி பயின்று வந்த பழைய மாணவன் ஆவேன்.
ஆனாலும் 1954ம் ஆண்டு முதல் இக் கல்லூரியில் கல்வி கற்று வந்த எனது மூத்த சகோதரியுடன் அவருக்கு உதவியாக இக் கல்லூரியில் நடைபெற்ற சகல வைபவங்களுக்கும் நானும் சென்றுள்ளேன்.
இன்னும் எனது மனதில் மறவாமல் நிற்கும் வைபவம் யாதெனில்....
1954ம் ஆண்டு இக் கல்லூரிக்கு « ட » னா வடிவில் ஒரு மாடிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பபட்டு திறப்பு விழா 1954ம் ஆண்டு நடைபெற்றது. இத் திறப்புவிழாவிற்கு பிரதம விருந்தினராக வருகை தந்தவர் அப்போதைய பிரதம மந்திரி சேர். ஜோன் கொத்தலாவல. ஆவர். கெலிகொப்ரர் மூலம் ஊர்காவல்துறை வந்தடைந்து அங்கிருந்து வாகன மூலம் அழைத்து வரப்பட்டார். பிரமாண்டமான வாண வேடிக்கைகளுடன் திறப்பு விழா கோலாகலமாக நடைபெற்றது. இதன் திறப்பு விழாவின்போது கட்டிடத்தின் « ட » வின் மூலையில் மலைவேம்பு சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் நாட்டப்பட்டது.

இதைத் தொடர்ந்து இசை விழர, நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இக் கால கட்டத்தில் திரு. தம்பு அவர்கள் அதிபராக கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சண்முகம்பிள்ளை மகாதேவா**
*J.T.O Elec. & Mech Eng.*



படிப்பகம்

www.padippakam.com

# எமது கிளையின் நிர்வாக உறுப்பினர்கள்

**1992 — 93 ம் ஆண்டு**

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | — | திரு. திருமதி. சுந்தரலிங்கம் |
| தலைவர் | — | திரு. யா. பாலகிருஷ்ணன் |
| செயலாளர் | — | திரு. செ. காசிலிங்கம் |
| பொருளாளர் | — | திரு. நா. மகேந்திரன் |
| உப தலைவர் | — | திரு. த. சந்திரகுமார் |
| உப பொருளாளர் | — | திரு. க. வாசுதேவன் |
| நிர்வாகக் குழு உறுப்பினர்கள் | — | திரு. யா. பத்மநாதன் |
| | | திரு. அ. தேவதாசன் |
| | | திரு. சு. கருணாநிதி |
| | | திரு. இ. சிறீதரன் |
| | | திரு. இ. இராசலிங்கம் |

**1994 ம் ஆண்டு**

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | — | திருமதி. இ. சுந்தரலிங்கம், திரு. வி. ரி. இளங்கோவன் |
| கணக்கு பரிசோதகர் | — | திரு. சி. காராளபிள்ளை |
| தலைவர் | — | திரு. யா. பாலகிருஷ்ணன் |
| செயலாளர் | — | திரு. செ. சிறீதரன் |
| பொருளாளர் | — | திரு. க. குகநேசன் |
| உப தலைவர் | — | திரு. த. சந்திரகுமார் |
| உப பொருளாளர் | — | திரு. க. சந்திரசேகரன் |
| நிர்வாகக் குழு உறுப்பினர்கள் | — | திரு. நா. மகேந்திரன் |
| | — | திரு. க. பாலமூர்த்தி |
| | | திரு. யா. பத்மநாதன் |
| | | திரு. சி. பாலச்சந்திரன் |
| | | திரு. க. விக்னேஸ்வரன் |

**1995 — 96 ம் ஆண்டு**

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | — | திரு. சி. காராளபிள்ளை, திருமதி. இ. சுந்தரலிங்கம் |
| கணக்கு பரிசோதகர் | — | திரு. ப. சுந்தரலிங்கம் |
| தலைவர் | — | திரு. யா. பாலகிருஷ்ணன் |
| செயலாளர் | — | திரு. சு. கருணாநிதி |
| பொருளாளர் | — | திரு. க. விக்னேஸ்வரன் |
| உப தலைவர் | — | திரு. த. சந்திரகுமார் |
| உப பொருளாளர் | — | திரு. க. சந்திரசேகரன் |
| நிர்வாகக் குழு உறுப்பினர்கள் | — | திரு. யா. பத்மநாதன் |
| | — | திரு. இ. தயானந்தன் |
| | | திரு. செ. சிறீதரன் |
| | | திரு. செ. காசிலிங்கம் |
| | | திரு. சு. சத்தியதர்மபாலா |

**1997 ம் ஆண்டு**

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | — | திரு. சி. காராளபிள்ளை, திருமதி. இ. சுந்தரலிங்கம் |
| கணக்கு பரிசோதகர் | — | திரு. ப. சுந்தரலிங்கம் |



படிப்பகம்

www.padippakam.com

| | | |
|---|---|---|
| தலைவர் | — | திரு. யா. பாலகிருஷ்ணன் |
| செயலாளர் | — | திரு. சு. கருணாநிதி |
| பொருளாளர் | — | திரு. க. விக்னேஸ்வரன் |
| உப தலைவர் | — | திரு. செ. சிறீபாஸ்கரன் |
| உப செயலாளர் | — | திரு. அ. தேவதாஸ் |

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் — திரு. யா. பத்மநாதன்
— திரு. சு. சத்தியதர்மபாலா
— திரு. க. விக்னேஸ்வரன்
— திரு. இ. தயானந்தன்
— திரு. செ. பாஸ்கரன்

1998 ம் ஆண்டு

| | | |
|---|---|---|
| போஷகர்கள் | — | திரு. திருமதி. இ. சுந்தரலிங்கம், திரு. செ. தவவிநாயகம் |
| கணக்கு பரிசோதகர் | — | திரு. ப. சுந்தரலிங்கம் |
| தலைவர் | — | திரு. யா. பாலகிருஷ்ணன் |
| செயலாளர் | — | திரு. சு. கருணாநிதி |
| பொருளாளர் | — | திரு. அ. தேவதாஸ் |
| உப தலைவர் | — | திரு. செ. ஸ்ரீபாஸ்கரன் |
| உப செயலாளர் | — | திரு. செ. சுந்தரலிங்கம் |
| உப பொருளாளர் | — | திரு. திரு. ப. கந்தப்பிள்ளை |

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் — திரு. யா. பத்மநாதன்
- திரு. இ. தயானந்தன்
- திரு. சு. சத்தியதர்மபாலன்
— திரு. செ. காசிலிங்கம்
— திரு. செ. தேவன்

நிர்வாகம் நடப்பாண்டு



நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) செ. சுந்தரலிங்கம் செ.தேவன், யா. பத்மநாதன், ப. கந்தப்பிள்ளை
இருப்வர்கள் (இடமிருந்து வலம்) சு. கருணாநிதி, யா. பாலகிருஷ்ணன், அ. தேவதாசஸ்
படத்தில் இல்லாதவர்கள் : செ. ஸ்ரீபாஸ்கரன், செ. காசிலிங்கம், இ. தயானந்தன், சு. சத்தியதர்மபாலன்



படிப்பகம்

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

வேலணை மத்திய கல்லூரி என்ற பெயருடன் வலிகாமம் மேற்குப் பகுதிக்கு அறிவொளி காலவந்த குழந்தை 1945ம் ஆண்டு நவம்பர் மாதம் 01ம் திகதி நாவலர் பரம்பரையினால் உருவாக்கிப் பரிபாலிக்கப் பட்டு வந்த சைவப்பிரகாசத்தில் தீவுப்பகுதி மக்கள் செய்த தவப்பயனாய் உதித்தது. இதன் பிதா 54 தொகுதிக்கும் தொகுதிக் கொன்றாக மத்திய கல்லூரியை விதந்துரைத்த இலங்கை வரலாற்றின் மிகச் சிறந்த கல்வி மந்திரியாகவிருந்த சேர் W.W. கன்னங்கரா ஆவர். வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்ட அன்றைய வலிமேற்கு பிரதிநிதி, சட்டசபைச் சபாநாயகர் சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமியின் வழிகாட்டலில் அன்றைய வேலணைக் கிராமச்சங்கத் தலைவர் திரு. இ. மருதையினார் அவர்கள் மக்கள் கொடுத்துதவிய பணத்துடன் கொட்டில் போடுவித்து கல்லூரி இயங்க ஆவன செய்தார். சிறப்பான அதிபர் ஒருவரைப் பெற கல்வி இலாகாவில் வேலை செய்த தீவுப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் உறுதுணையானார். திரு. A.K. கந்தையா முதல் அதிபராகப் பொறுப்பேற்றார். 1945 நவம்பரில் 6ம் வகுப்பில் ஆங்கில மொழி மூலம் கல்வி கற்கத் தொடங்கி 1950 டிசம்பரில் நடந்த S.S.C. சோதனையில் நூறு வீத சித்தியும் பெற்ற பெருமையில் பெரும்பங்கு அதிபரையே சாரும். பாடசாலையிலேயே மாலை 6 மணிவரை தங்கி மாணவர் கல்வியில் அதிக அக்கறை எடுத்துக் கொண்டார். அவர் படிப்பித்த ஆங்கில இலக்கியமும், கணிதமும் இன்று நினைத்தாலும் இனிக்கும். அவருக்கு உறுதுணையாக சிறப்பான ஆசிரியர் குழாமும் அமைந்தது. மூன்று இல்லங்களுக்கிடையே கன்னங்கரா, துரைச்சுவாமி, சாண்டிமன் இல்லங்கள் — விளையாட்டு, தோட்டவேலை என பலதரப்பட்ட துறைகளில் போட்டிகள் சிறப்பாக இடம் பெற்றன. இத்துடன் சாரணீய இயக்கமும் விருத்தியுற்றது.

கல்லூரியைத் திறந்து வைத்தவர் கல்வி மந்திரி கன்னங்கரா அவர்களேயாகும். ஒரு பெரு விழாவாக என்றும் நினைவு கூரத்தக்கதாக அது அமைந்தது. இவ்வாரம்ப காலத்தில் ஊர்காவற்றுறை, மண்கும்பான், கரம்பன், சுருவில் போன்ற தூர இடங்களிலிருந்து மாணவ, மாணவியர் நடந்து வந்தே கற்றனர். இக்காலப் பகுதியில் புலமைப் பரிசில் திட்டமும் நடைமுறைக்கு வந்தது. அந்த அந்தத் தொகுதி மாணவர் அந்த அந்த மத்திய கல்லூரியிலேயே படிக்கவேண்டும். இரண்டு வீடுகள் வாடகைக்கு எடுக்கப்பட்டு ஆண்கள் விடுதி, பெண்கள் விடுதியாக அமைக்கப்பட்டன. பிள்ளைகள் தங்கிப் படிக்கப் பேருதவியாக அமைந்தன. முதலாவது விடுதி மேற்பார்வையாளர் திருமதி சபாரட்னம். முதலாவது உதவி அதிபர் செல்வி L. P. முருகேசு. முதலாவது காவலாளி திரு. இராசையா. முதலாவது மாணவன் திரு. M. லிங்கப்பிள்ளை.

1951ம் ஆண்டு ஜனவரியில் திரு. V. தம்பு அதிபரானார். நீண்ட காலம் பாடசாலைச் சுற்றாடலில் தங்கி அதிபர் பதவி வகித்தார். இவரது காலப் பகுதியில்தான் புதிய மாடிக் கட்டடங்கள் கொண்ட கல்லூரி கட்டப்பட்டு திறக்கப்பட்டது. ஆளுநர் சோல்பரி பிரபுவினால் அடிக்கல் நாட்டப்பட்டு பின்னர் 1954 ல் பிரதமராகவிருந்த சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலைக்கு முன்பாக ஆண், பெண் விடுதிகளு மமைந்தன. மாணவர் தொகையும் அதிகரித்தது. G.C.E(A.L) வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. இக் காலப்பகுதியில் பழைய மாணவர்களும் பட்டம் பெற்ற பின் இங்கு படிப்பிக்கச் சேர்ந்து கொண்டனர். புது ஆர்வம் பிறந்தது. O.L., A.L வகுப்புகளில் சிறப்பான பெறுபேறுகள் பெறத் தொடங்கினர். விஞ்ஞானம், கலைப்பகுதி என்பவற்றில் பல மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படிக்கத் தொடங்கினர். சிவகாமி சமேத நடராஜப் பெருமான் ஆலயத்திற்கு அடிக்கல்லும் நாட்டப்பெற்றது. அதிபர் தம்பு அவர்கள் மக்கள் மனதில் தனக்கென ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண்டார். இவருக்குப் பிரியாவிடை பெரு விழாவாக அமைந்தது. கொழும்பிலும் பழைய மாணவர்கள் பிரியாவிடை மிகச் சிறப்பாகக் கொடுத்தனர்.

இவரைத் தொடர்ந்து திரு. A.T. சபாரட்ணம் அதிபரானார் (1962—1964). இவர் மாணவர் கல்வி சிறப்புற செய்ய வேண்டிய அடித்தளங்களை நாட்டினார். பல பிரிவுகளைக் கொண்டு ஒவ்வொரு வகுப்பு மமைந்திருந்த படியால் ஒரு பிரிவு மாணவர் சர்வகாலாசாலை சென்று கல்வி கற்கக் கூடியதாக அமைய வேண்டும். புத்திக் கூர்மை மிக்க மாணவர்களை இனங் கண்டு மேலோங்கச் செய்ய வேண்டுமென அதற்குரியவற்றையும் செய்தார். ஆங்கிலக் கல்வி சிறப்பாயமைய அதற்கென ஒரு சிறப்பான ஆசிரியரையும் தருவித்து Tape Recorder, Cassette முதலியன பெற்று விசேடமாக Spoken English விருத்தியடையவென பெரு முயற்சி எடுத்தார். விடுதியில் மாணவர்க்குரிய உணவு வகைகள் தரமிக்கதாக விருக்கவும் பெரு முயற்சி எடுக்கப்பட்டது. விஞ்ஞான ஆய்வு கூடங்கள் மேலும் வளம் பெற்றன. பாடசாலை, விடுதி என்பவற்றினூடாக பொதுப்பாதைகள் அமைவதைத் தடுத்து வேலிகள் போடப்பட்டன. சங்கீத விழாவும் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலை பல வழிகளிலும் முன்னேற விருந்த சந்தர்ப்பத்தில் இவருக்கு இடமாற்றம் ஏற்பட்டது தீவுப்பகுதி மக்களின் துரதிருஷ்டமேயாகும்.

இவரைத் தொடர்ந்து வந்தவர் திரு. சிவசிதம்பரம். இரு வருடங்கள் இங்கு அதிபர் பதவி வகித்தவர். கண்டிப்பானவர். கொள்கைவழி நடப்பவர். சிறப்பான விஞ்ஞான ஆசிரியருங்கூட. இவரது காலப்பகுதியிலும் பல்கலைக் கழகத்திற்கு மாணவர்கள் பலர் தெரிவு



படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்டனர். அல்லாதோருக்கும் உத்தியோக வாய்ப்புக்கள் கிடைத்தன. இவரைத் தொடர்ந்து திரு. J.S. அரியரட்ணம் 1967—19 71 வரை அதிபராக சிறப்பாக செயலாற்றினார். பாடசாலை முன்னேற பல வழிகளிலும் முயற்சியெடுத்துக் கொண்டார். O.L, A.L. வகுப்புகளில் சிறப்பான பெறுபேறுகள் ஏற்பட்டன. பாடசாலை வெள்ளிவிழாக் கொண்டாட பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது கைகூடவில்லை என்ற ஆதங்கத்துடன் மாற்றலாகி அவர் செல்ல வேலணை திரு. ப. பொன்னுத்துரை அவர்கள் குறுகிய காலம் அதிபராகக் கடமை ஆற்றினார். இவரைத் தொடர்ந்து திரு. C. இராஜநாயகம் 1972ல் அதிபர் பதவியை ஏற்றுக் கொண்டார். தீவுப்பகுதியைச் சேர்ந்தவர். இவரது காலப்பகுதியும் பாடசாலை வரலாற்றில் ஒரு சிறப்பான காலமாகும். கலை, விஞ்ஞானப் பகுதிகள் புத்தூக்கம் பெற்றன. பாடசாலை மைதானம் மாணவர்கள் தேவைக்குப் போதியதாகாமையால் ஆண்கள் விடுதிக்கு முன்புள்ள காணியை ஒழுங்கான ஒரு விளையாட்டு மைதானமாக்க பணம் அதிகம் தேவைப்பட்டது. இதற்கு ஒரு கலை விழா சிறப்பாக நடாத்தி காசும் சேர்க்கப்பட்டது. இவரும் பதவியுயர்வுடன் மாற்றலாகிச் செல்ல திரு தியாகராசா மிகக் குறுகிய காலம் அதிபர் பதவியை ஏற்றார். இவரைத் தொடர்ந்து வந்த அதிபர் வேலணை சேக்ஷ்பியர் நாகலிங்கத்தின் மருகர் திரு. C. குணபாலசிங்கம் ஆவார்.

இவரும் பாடசாலையைப் பல வழிகளிலும் முன்னேற்ற அயராது உழைத்தார். இவரது காலப் பகுதியில் பொறியியல் துறை மற்றும் பல் மருத்துவத்துறைக்கும் மாணவர் செல்லத் தொடங்கினர். புதிய நூலகம் திறக்கப்பட்டது. விளையாட்டு மைதானமும் நனவாகியது. விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக அமைய இத் திடல் சிரமதானப் பணி மூலம் மேற்கொள்ளப்பட்டது. சாரணீய இயக்கம் இதில் முக்கிய பங்கேற்றுக் கொண்டது. இக் காலப்பகுதியிலேயே பாடசாலைப் பெயரும் மாற்றம் பெற்றது.

இவரைத் தொடர்ந்து பிரதி அதிபராகவிருந்த பண்டிதர் திரு. க. இராசையா அவர்கள் சிறிது காலம் அதிபராகக் கடமையாற்றிய பின் திரு. சிவராஜரட்ணம் 1984—1987 வரை அதிபராகப் பொறுப்பேற்றார். நாட்டில் பல கஷ்டமான சூழ்நிலைகள் பாடசாலையில் பெரும் தாக்கத்தை எற்படுத்திற்று. ஆயினும் விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா என்பன வெல்லாம் நடைபெற்றன. பாடசாலையில் அமைந்த சிவகாமி சமேத நடராஜப்பெருமான் ஆலயம் பூர்த்தி செய்யப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இவரது காலப்பகுதியில் மருத்துவத் துறைக்கும் மாணவர் செல்லத் தொடங்கினர். கொத்தணி பாடசாலை அமைப்பு முறையும் ஆரம்பித்தது.

இவரைத் தொடர்ந்து பழைய மாணவரான வேலணையைச் சேர்ந்த திரு. S. சண்முகநாதன் கொத்தணி அதிபர் பொறுப்பை ஏற்று சிறப்பாக வழி நடாத்திச் சென்றார். நாட்டில் நிலவிய குழப்ப நிலை பாடசாலையைப் பல வழிகளில் தாக்கங்களை ஏற்படுத்தியது. இவரும் பதவியுயர்வுடன் செல்ல பழைய மாணவரான வேலணையைச் சேர்ந்த திரு. பொ. கேதாரநாதன் அதிபர் பதவியை ஏற்றார். இவரது காலப்பகுதி பல சோதனைகள் நிறைந்ததாயினும் நிலைமைகளை பாடசாலைக்கு சாதகமாக்கிக் கொண்டார். தீவுப்பகுதியிலிருந்து மக்கள் அனைவரும் இடம் பெயர வேண்டி ஏற்பட்டது. ஆயினும் பிள்ளைகளை ஓரளவுக்கு ஒன்று திரட்டி கொட்டடி நமசிவாயத்தில் இயங்க வைத்தார். இரண்டு பாடசாலைகள் ஒருங்கே முன்னேறின. விளையாட்டுப் போட்டி சிறப்பாக நடாத்தப்பட்டது.

பரிசளிப்பு விழா நடாத்த பணம் தேவைப்பட்டது. அதிபரும் பழைய மாணவர் சங்க செயற்குழுவும் பணஞ் சேர்க்கப் புறப்பட்டனர். ஐந்து பழைய மாணவர்களின் உதவி பெற்றதும் மனம் நிறைந்து திரும்பிவிட்டனர். பரிசளிப்பு விழாவிற்கு யாழ் இந்துக் கல்லூரி இடம் தந்து அதன் அதிபர் வேண்டிய சகல உதவிகளையுஞ் செய்தார். யாழ். சர்வகலாசாலையில் விரிவுரையாளர்களாக இருந்த பழைய மாணவர்கள் உதவவியுடன் சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக் கழக உபவேந்தர் திரு. துரைராஜா அவர்கள் சிறப்பித்தார். மாணவர்கள் சிறப்படைந்தனர். இதனையடுத்து கல்லூரி தனித்தியங்க வேண்டு மென்ற நிலை ஏற்பட அதிபர் ஒரு அன்னையின் உதவியை நாடினார். அவரது இல்லத்தில் கொட்டில்கள் போட்டு வகுப்புகளை நடாத்த அதற்கு இணக்கமும் பெற்று பல உடனடித் தேவைகளுக்கு பணஞ் சேர்ப்பதற்கு பல சிக்கல்களுக்கு மத்தியில் கொழும்பு சென்று பழைய மாணவர்களை ஒன்று திரட்டி நிதி திரட்டினார். உலகளாவிய ரீதியில் பரந்துபட்டிருக்கும் பழைய மாணவ சமுதாயத்தின் உதவியையும் நாடினார். London, Canada, France, Sydney, Melbourne ஆகிய இடங்களில் பழைய மாணவர் சங்கங்கள் அமைக்கப்பட்டு நிதியுதவியும் வரத் தொடங்கிற்று. இந் நிலையில் அவர் ஓய்வு பெற பழைய மாணவரான வேலணை மைந்தன் திரு. சு. கலாதரன் அதிபரானார். பழைய மாணவர் உதவிய பணத்தில் தளபாடங்கள், Generator என்பன பெறப்பட்டு பாடசாலையை நன்கு இயங்க வைத்தார். மாணவர்கள் தொடர்ந்து சர்வ கலாசாலைக்குச் செல்லத் தொடங்கினர். விளையாட்டுப் போட்டிகளும் மிகச் சிறப்பாக கொண்டாட முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்ட போதும் 1995 October ல் யாழ்ப்பாணமே திடீரெனப் புலம் பெயர்ந்தது.

1997ல் மீண்டும் பாடசாலை புத்துயிர் பெறத் தொடங்கிற்று. வேலணை கிழக்கு சரஸ்வதி வித்தியாசாலையில் பழைய மாணவர், எமது மண்ணின் மைந்தன், கல்வி அதிகாரி திரு. சு. இரத்தினராஜா அவர்களின் முயற்சியால் குற்றுயிராய் பல வழிகளிலும் தடைப்படுத்தப்பட்டிருந்த எமது அன்னை புத்துயிர் பெற்றெழத் தொடங்கினாள். தற்போது ஏறக்குறைய 300 மாணவர்களைக் கொண்டதாய் பழைய மாணவர் திரு. K. கணேசலிங்கம் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் இயங்கி வருகின்ற எம் அன்னைக்கு கைகொடுத்துதவ அனைவரும் முன்வர வேண்டும். இடப் பெயர்வு, தனிப்பட்டோர், குடும்பங்கள் இவற்றில் ஏற்பட்ட பாதிப்பிலும் பார்க்க கூடிய பாதிப்பை எமது அன்னைக்கு ஏற்பட்டுள்ளது. அதிபரும் பழைய மாணவர். ஆசிரியர்களும் பழைய மாணவர்கள் எல்லோரும் சிறப்பாகப் பணியாற்றுகின்றனர்.


வாழ்க எம் அன்னை!
வாழ்க எம் மாணவர் சமுதாயம்!!

பழைய மாணவி,
இளைப்பாறிய உப அதிபர்,
**திருமதி. திருமகள் கேதாரநாதன்**



படிப்பகம்

www.padippakam.com



**எமது கல்லூரியின் இன்றைய அதிபர்**
**திரு. க. கணேசலிங்கம்**



படிப்பகம்

www.padippakam.com

# சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம்

இலங்கையின் கல்விவளர்ச்சிக்கு வரலாற்றில் திருப்பு முனையாக அமைந்தவர் அன்றைய கல்வி மந்திரி சேர். C.W.W. கன்னங்கரா அவர்கள். இலவசக்கல்வியின் «தந்தை» என அழைக்கப்பட்ட இவர் கல்வி மந்திரியாவதற்கு முன் செல்வந்தர்களுக்கே உயர் கல்வி வாய்ப்புக் கிட்டியது. மிஷன் பாடசாலைகள் அவை அவையமைந்த அந்தந்தப் பகுதியினர்க்கு மட்டும் உயர்கல்வி பெறும் வாய்ப்பிருந்தது.

இலங்கையர் யாவரும் சாதிமத பொருளியல் அந்தஸ்த்து ஏற்றத்தாழ்வின்றி எல்லோரும் உயர்கல்வி பெறும் வாய்ப்பை ஏற்படுத்த அப்போதைய இலங்கையின் ஐம்பத்தி நான்கு தொகுதிகளுக்கும் ஒவ்வொரு மகாவித்தியாலங்களை உருவாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

அன்று வலிகாமம் மேற்கு பிரதிநிதியாயிருந்தவர் அன்றைய சபாநாயகர் சேர்.வைத்திலிங்கம் துரைசுவாமி அவர்கள். வடமாகாண கல்வியதிகாரியாயிருந்தவர் திரு. ஈ. வி. சோமசேகரம். வேலணை கிராமோதய சபைத் தலைவராக இருந்தவர்ஆசிரிய மணி திரு. இ. மருதையனார் அவர்கள். அப்போது சுழிபுரம் தீவுத்தொகுதியுடன் இணைந்து வலிகாமம் மேற்கு தொகுதி எனப் பெயர் பெற்றிருந்தது. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி சிறப்பான கட்டடத்தொகுதிகளைக் கொண்டிருந்தது. இதையே மகாவித்தியாலயமாக்கும் நோக்கம் அவரிடமிருந்தது.

அராலிக்கடலுக்கு அப்பால் தீவுத்தொகுதியின் பெரும்பகுதி பரந்துகிடந்தது.
பெரும்பகுதி மாணவர்கள் தரையிலும் கடலிலுமாக தினமும் பயணம் செய்தே கல்லூரிக்குச்செல்ல வேண்டும். இது மாணவர்களுக்கு பெருஞ்சிரமத்தைக் கொடுப்பதாக இருந்ததனால் வேலணையில்த்தான் இக் கல்லூரி அமைய அப்போதைய கிராமோதைய சபைத் தலைவரும் வேறுசிலரும் இரவுபகலாக பொதுமக்களிடம் தற்காலிக கட்டத்திற்குப் பணம் சேர்த்தனர்.
ரூபாய் ஏழாயிரம் சேர்ந்தது. சைவப்பிரகாசவித்தியா சாலை இடம்தர இசைந்தது. கொட்டில்கள் போடப் பட்டன. திறமையான அதிபர் ஒருவரையும் தேடிப்பிடித்தனர். பாடசாலை முதலாம் திகதி நவம்பர் மாதம் நாற்பத்திஐந்தாம் ஆண்டு ஏ. கே. கந்தையா அவர்கள் அதிபராக ஆரம்பமாயிற்று. நல்ல முறையில் விளையாட்டுப் போட்டிகளையும் நடாத்தி மாணவர்கள் வெற்றிபெற்றனர். கல்லூரி மாணவர்களிடையே மட்டு மல்ல. போட்டிகள் யாழ் பாடசாலை மாணவர்களுடனும் நடாத்தப்பட்டு வெற்றியுமீட்டியது.

அன்றைய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் மிகச் சிறப்பாகத் தொழிற்பட்டனர். அதிபரின் பங்கும் திறமையும் அளப்பரியது. முதன் முறையாக ஆயிரத்துத் தொழாயிரத்து ஐம்பதாம் ஆண்டு S.S.C. பரீட்சையில் ஏறத்தாள நூறு வீதத்தினர் சித்தியடைந்தனர்.

தீவுத்தொகுதியின் வேலணையில் இம்மகா வித்தியாலயம் அமைய காரண கர்த்தாவாக இருந்தவரும். வேலணையின் தபால் நிலையம். மகப்பேற்று நிலையம். போன்றவற்றிற்கு பிதாமகனாகவும் தன் காணிகளை இனாமாகக் கொடுத்து மக்களுக்குச் சேவை செய்தமைக்காகவும் பின்னாளில் இக்கல்லூரிக்கு சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி மத்தியமகாவித்தியாலயம் என பெயர் மாற்றப்பட்டது.

யாழ் தொகுதியில் ஸ்ரான்லி ம. ம. வித்தியாலயம் கதைரெத்தினம் மகாவித்தியாலயம் என்றாற்போல... சேர். வைத்திலிங்கம் துரைச்சாமியின் சேவைக்கு நன்றியறிதலாக அவரது பெயரைச் சூட்டினார்கள்.

— இராசமணி —



படிப்பகம்

www.padippakam.com



# எண்ணிப் பார்க்கிறேன் என் பள்ளிக் காலத்தை



வங்கக் கடலின் ஒருகரை வந்து அலைமோதும் தீவகம். அந்தப் பதியின் மத்தியில் வானைத் தொட்டிட எண்ணியே நிமிர்ந்து நிற்கும் பனம், தென்னங் குருத்துக்கள். இந்தக் குருத்துக்களை தீண்டி அசைக்கும் தென்றல் காற்றின் இசை சேர்ந்து கவிபாடும் செந்தமிழ்ப் புலவர்கள் பிறந்து வாழ்ந்த மண் இந்த வேலணைப் பதியாகும்.

இந்தப் பதியின் மேற்குத் திசையில் தீவக மக்கள் கூடிடும் தலைப்பட்டணம் ஊர்காவல்துறை சென்றிடும் வீதி. அந்த வீதியின் இரு புறங்களும் கண்ணுக்கெட்டிய தூரம் எல்லாம் கண்ணைப் பறிக்கும் பச்சை நிறத்து பயிர் வளங்கள். அவையுள் பொன் நிறத்தைக் கொண்ட நெற் பயிர்கள் ஆடி அசைந்தும் தெம்மாங்கு பாடும். சிங்கள நாட்டு தென்மாநில மக்களின் தேனாமிர்த கைப்பொருள் பருப்பை பாணை மறந்திட்ட போதும் மறக்காப் பொருள் «றட்டத்துங்கள» என்று அன்புப் பெயரால் அழைக்கும் புகையிலைப்பயிர் மண்ணை மூடிக் கூடாரம் போட்டிருக்க உதிக்கும் கதிரவன் ஒளி பட்டு அதன் உதிரத்து வீணிக்குருதி ஒரு மின்னல் கொட்ட உயர்ந்த மணிக் கோபுரத்தின் ஒலி கொடுக்கும் இலந்தைவனப் பிள்ளையார் அருள் கொடுக்க சோமுவின் புத்தகக் கடை அறிவு மணம் வீச உணவோடு தமழ் உணர்வூட்டும் சாமியாரின் தேனீர்க் கடையில் உளுந்து வடை மணக்க குலசேகரத்தின் வாடைத் துவிச்சக்கர வண்டிகள் வரிசைப்படுத்தி கண்ணைப்பறிக்கும்.

காட்சிகள் பல கண்ணுக்கு இதமாக இருந்தும் மண்டைதீவில் இருந்து வரும் பச்சை நிறத்து BSA சைக்கிள் பயம். என்போன்ற மாணவர்கள் எவரையும் ரசனையோடு ரசிக்கத் தடுக்கும். காரணம் அதில் வருபவர்தான் எங்கள் வகுப்பாசிரியர், கணக்காசிரியர் மட்டுமல்ல வங்களாவடிச் சந்தி முதல் பாடசாலை வகுப்பறை வரை மாணவர்களின் பாதுகாப்பு அதிகாரி. தவறுக்குத் தண்டனை கொடுக்கும் பொலிஸ்காரர். சரியாக பாடசாலைக்கு நாங்கள் வரும் நேரம் பார்த்து அவர் வருவார் கண்ணை அகல விரித்தபடி. மாணவர் நலனும், பாடசாலையின் கௌரவமும் அவர் செயலில் அடங்கி இருக்கும். அதனால் எல்லோராலும் மதிக்கப்பட்டார்.



படிப்பகம்

www.padippakam.com

கந்தப்ப வாத்தியார் பள்ளியில் ஆரம்பித்த இன்றைய எமது மத்திய மகா வித்தியாலயம் நீண்ட இரண்டு கிடுகுக் கொட்டிலில் தீவக மக்களின் பாரிய பொறுப்பேற்று தன் பணியைத் தொடர்ந்தது. அன்றைய அதிபர் வி. தம்பு அவர்கள் என் வகுப்பு ஆசிரியர் ஏரம்பு வாத்தியார் என் பள்ளித் தோழர் பாலசுப்ரமணியம் (பின்நாள் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர்) எல்லாத் துறையிலும் என் பெயர் துலங்கும் என்பதால் என்மேல் அனைவரும் அன்பைச் சொரிந்தனர். ஆனால் என்னெண்ணம் மட்டும் அந்தச் சாமிகளையே சுற்றி இருந்தது ஏனென்றால் வறுமையில் வாடிய அந்தத் தாடி வைத் உருவம் நாளாந்த குடும்ப வாழ்க்கைக்கு அந்தக் கடையையே நம்பி வாழ்ந்த மனிதர் நெஞ்சைத் தொட்டிருந்த தமிழ் உணர்வும் உணர்வை ஊட்ட எடுத்த செயல் வடிவமும் தான். அந்தக் கிடுகுக் கொட்டிலில் தொங்கிக் கொண்டிருந்தது ஒரு காட்போட் மட்டை கவிதை. உணர்வைத் தட்டி எழுப்பும் புரட்சிப்பாடலது என்இதயம் தொட்ட முதல் எழுச்சிப்பாடல். வகுப்பு லீவு நேரத்தில் நான் அந்தக் கடையில்தான் காலம் போக்குவேன். ஏனென்றால் அந்தப்பாடல் படிக்க படித்து பாடம் செய்ய வேண்டுமென்ற ஆவல். அவரந்தப் பாடலை வைத்து ஒரு போட்டியை நடாத்தினார். போட்டியில் அந்தப் பாடலை மனப்பாடம் செய்து சரியான உணர்வு ரீதியோடு ஒப்புவித்தால் பரிசு தருவாராம். பரிசு என்னவென்று தெரியுமா...? ஒரு மசாலை வடையும் ஒரு பிளேன்ரீயும் தான். அந்தப் பரிசுக்காக வல்ல என் நோக்கம். அந்தப் பாடல் என் இதயத்தைத் தொட்ட பாடலாக இருந்ததாலும் பாடலிலிருந்த உயிரோட்டமான உணர்வுச் சொற்களும் தான் அநதப்பாடலைப் பாடலாக்கி விடவேண்டுமென்ற எனது அவாவே காரணம்.

இதோ பாடல்

உதய சூரியன் உதிக்கின்றபோது தூங்காதே தமிழா
அடிமைத்தனமா? விடுதலை வாழ்வா..?
அஞ்சி வாழ்வதும் கெஞ்சி வாழ்வதும்
ஆண்மைத் தமிழனுக்கு அடுக்குமா...?
உரம் கொண்ட தீரர் நாம்
நிறுவுவோம் தமிழரசு.

இப்படிப்பட்ட பாடல்கள் இன்றைய காலகட்டத்தில் தமிழருக்குத் தேவையான பாடம். ஆனால் வாழ்வின் வறுமையிலும் அந்தக் கொட்டில் ஊட்டிய உணர்வு பள்ளிக்கூடப் பாடத்தை விடஎன் குருதி நரம்புகளில் சூடேற்றிவிட்டது. பாடல் வந்த சூழல், காலம், காரணம், நோக்கம் மாறுபட்டிருந்தாலும் அவர் அதை ஊக்குவித்த விதமும் சிந்தனையும் என்னைக் கவர்ந்தது. சாமியை நினைக்க வைத்தது.

ஒரு மார்கழி மாதம் வகுப்பேற்றப்பரீட்சை ஆரம்பமாகி இருந்தது. மறு நாளைய பரீட்சைக்கு என்னால் இயன்ற மட்டும் பாடங்களைச் சப்பி மண்டைக்குள் புகுத்திவிட்டேன். எதிர் பார்க்காத நிலையில் என் தலையில் விதி அடித்தது. பரீட்சையன்று எனக்கு கண்நோ ஏற்பட்டது. காலையிலெழுந்து ஒரு கண்ணைப் பொத்தியபடி ஓடினேன். முதலில் சந்தித்தவர் என் வகுப்பாசிரியர். ஏரம்பு மாஸ்ரர்தான். நான் அவரிடம் எதுவுமே கூறாமல் உள்ளே சென்று அமர்ந்தேன் எப்படியும் பரீட்சை எழுத வேண்டும் என்ற ஆவலுடன். ஆனால் அங்கு விதி என்னை விடவில்லை. எப்பயோ ஏரம்பு மாஸ்ரர் என் நிலையைக் கண்டு அருகே வந்து «உனக்கு கண்வருத்தம் இங்கு இருக்கக் கூடாது இங்குள்ள மற்ற மாணவர்களுக்கும் தொற்றி விடும். வீட்டிற்குப்போ» என்றார். கெஞ்சினேன் மனறாடினேன். அவர் விடவில்லை. அதிபரிடம் ஓடினேன். நிகழ்ந்தது நடந்தது சொல்லி தீர்ப்புக் கேட்டு நின்றேன். அவரும் முன்னவர் தீர்ப்பையே முடிவாக்கிச் சொன்னார்.

வேதனைக் குளத்தில் மூழ்கினேன். வேண்டாத தெய்வம் இல்லை. வேதனையில் மிதந்தபடி பள்ளி வாழ்க்கைக்கு இறுதி பயணம் சொல்லிவிட்டு பரீட்சை மண்டபத்தை திரும்பித் திரும்பி பார்த்த வண்ணம் சாமிகடைப்பாடலை வாய்க்குள் முணுமுணுத்தபடி சாமியாருக்கும் நடந்ததைக் கூறி கவலை தோய்ந்த முகத்தத்துடன் கால் நடையாய் வீடு சென்று அம்மாவின் மடியில் வீழ்ந்தேன். அதுவே என் பள்ளி கடைசி அத்தியாயம்.

வேலணையூர் பொன்னண்ணா
டென்மார்க்



படிப்பகம்

www.padippakam.com

# எமது பாடசாலை

## - தேவதாஸ்

நாளைக்குப் பள்ளிக்கூடம். அதிலும் புதுப்பள்ளிக்கூடம். எனக்கும் என் சில நண்பர்களுக்கும் பள்ளிக்கூடத்தைப் பற்றியே பேச்சு. இருநூறுக்குட்பட்ட சிறிய பாடசாலையில் இருந்து. இன்று ஆயிரத்து ஐந்நூறு பேர்களைக்கொண்ட பெரிய பாடசாலை. தீவுப்பகுதிக்கே பொதுவானதாகக் கட்டப்பட்ட மேல் மாடிக் கட்டிடத்தைக்கொண்ட அந்தப் பெரிய பாடசாலையில் படிக்கப்போகிறோம். என்பதால் எம்மெல்லோருக்குமே பெரும்மகிழ்ச்சி.

நானும், நண்பர்களும் வயல்களையும், வெளிகளையும், தோட்டங்களையும் கடந்து பாடசாலை சென்ற முதல்நாள். பௌதிக கூடத்திற்கும், மலசல கூடத்திற்குமிடையில் இருந்த வெளியில் எங்களுக் காகவே தற்காலிகமாக அமைக்கப்பட்ட வருப்பறைகளில் பிரித்து அமர்த்தப்பட்டோம். பல சிறிய பாடசாலைகளில் இருந்து பலர் வந்ததினால், பல முகங்களும் புதியதாகவே இருந்தன. ஆனாலும் சில நாட்களில், எல்லோரையும் புரியக்கூடியதாக இருந்தது. இருப்பினும், சேலை கட்டிய மேல் வகுப்பு மாணவிகளும், ரவுசர் போட்ட, வேட்டி கட்டிய மேல்வகுப்பு மாணவர்களும், தங்களுக்கேயுரிய ஒரு முறைப்பான பார்வை. நாங்களும் அவர்களுக்கு அண்ணா, அக்கா என்ற மரியாதையுடனேயே நடந்து கொண்டோம்.

படிப்பு பெரும் கசப்பாக இருந்தது. பாடசாலையில் மதியநேரம் ஆளுக்கு இரண்டு பணிஸ் கொடுப்பார்கள். நாம் பணிசை வாங்கி பைக்கற்றுக்குள் திணித்துவிட்டு பாடசாலைக்கு அருகிலுள்ள மிளகாய்த் தோட்டத்திற்குள் மறைந்து விடுவோம். மிளகாய்ப் பழங்களை, கிளிகள் ஒரு கை பார்க்க, நாங்கள் மிளகாய்ப் பிஞ்சுகளை ஒரு கை பார்ப்போம். பணிசுக்குள் புதைத்து வாயிற்குள் திணித்து விடுவோம். உறைப்பு நாக்கைச் சுடும்போது தண்ணீருக்காக, அருகிலுள்ள வைரவ கோவில் கிணற்றை நாடுவோம். வயிறு முட்டும்வரை தண்ணீரைக் குடிக்க உடம்பெல்லாம் நனைந்து பின்னேரப் பாடசாலைக்குப் போகும் திட்டம் கைவிடப்படும். சிலுந்தாவா, பெருங்குளமா சிறந்ததென்று எங்களுக்குள் பட்டி மன்றம் நடாத்தி, பெருங்குளம்தான் பாதுகாப்பானதென முடிவெடுக்கப்படும். சிலுந்தா, பாடசாலைக்கு மிகவும் அருகிலிருப்பதால், பிரதான றோட்டால் போகும் மாணவர், ஆசிரியர்களுக்குத் தெரிந்துவிடும். அப்படி ஒருநாள் அகப்பட்டு பிரின்சிப்பலிடம் சவுக்கடி பெற்றதும் ஞாபகமுண்டு. அதனால், பெருங்குளம் மிகவும் தூரத்திலிருந்தாலும் பாதுகாப்பானதென எண்ணிக்கொள்வோம்.

வருடங்கள் மெல்ல, மெல்ல நகர, எமக்கு மீசைகள் அரும்ப, ஆசைகளும் அதனோடு அதிகரித்தது. படிப்பென்றால் பெரும் வெறுப்பாகவே தோன்றியது. அதிலும் கணக்குப் பாடம், ஆங்கிலப் பாடம் என்றால் சிம்ம சொப்பனம். கற்பிக்கின்ற ஆசிரியர்களைப் பொறுத்தும் நாம் பாடசாலையை கட் பண்ண நினைப்பதுண்டு. ஆசிரியர்கள் பலருக்கு நாங்கள் பலவகையான பட்டங்களை அளித்திருக் கின்றோம். கொதியன் என்று ஒருவருக்குப் பட்டம். அவர், நம் வகுப்புக்கு பாடம் எடுத்திடக்கூடாதென் பதற்காக அருகிலுள்ள வைரவரை அடிக்கடி கும்பிட்டுக்கொள்வதுண்டு. மனிசன் அடிக்கப் பிடிச்சு தெண்டால், ஆளைப் பந்தாடும். பிறகு, தானே வருத்தப்பட்டு கன்ரீனிலை சாப்பாடும் வாங்கித்தரும். இப்படிச் சிலர் இருந்தாலும், பலர் அன்பாகப் பேசி பாடம் சொல்லித் தருவதில் வல்லவர்களாயிருந்தார்கள்.

நாம் படித்த காலகட்டம், திருவாளர். அரியரத்தினம் அவர்கள் அதிபராகவும், திரு. பொன்னுத்துரை அவர்கள் உப அதிபராகவும், பண்டிதர். திரு. இராசையா அவர்கள் மூன்றாவது அதிபராகவும் இருந்தனர். மாணவர் ஒழுங்கு, படிப்பு, விளையாட்டு என்பன வளர்ந்துகொண்டேயிருந்தது. நயினாதீவு, புங்குடுதீவு, மண்டைதீவு போன்ற பல பகுதிகளிலிருந்து பல மாணவர்கள், பாடசாலை விடுதியில் தங்கியிருந்து படித்தனர்.

ஊர்காவற்றுறை பிரதான வீதியருகே, அழகானதொரு விளையாட்டு மைதானம். அந்த மைதானத்தைக் கடந்தால், உயர்ந்து, நிமிர்ந்து கம்பீரமான இரண்டு மாடிகளைக் கொண்ட அழகான கட்டடம். அதோடு இணைந்த அழகான மேடையுடன் கூடிய பெரிய மண்டபம். வீதிக்கு மறு புறத்தில் ஆண்கள், பெண்க ளுக்கான தனித்தனி விடுதிகள். விளையாட்டை வளர்த்தெடுப்பதிலே தன் அனைத்து சக்திகளையும் செலவழித்து எந்தநேரத்திலும் மைதானத்திலேயே குடியிருக்கும் திருமதி. அழகரட்ணம், திரு. சுந்தர சேகரன். இவர்கள் காலத்தில் மற்றைய பாடசாலைகளோடு பல விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றி, வெற்றிகொண்டன. கல்வியிலும் மேலோங்கி பல நூற்றுக்கணக்கான மாணவர்களை, நாட்டின் தலை சிறந்த



படிப்பகம்

www.padippakam.com

கல்விமான்களாகவும் அறிவுஜீவிகளாகவும் ஆக்கியிருக்கிறது. இளமை என்பதே,இனிமை. அந்த இளமை, பாடசாலைக் காலங்களிலேயேதான் அதிகமாகச் செலவாகிறது. அதனால்தான், பாடசாலை அனுபவங்கள் என்றென்றும் மனதிற்குள் சுகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

எமது தாயகத்தின் தலைசிறந்த பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றாகும். தலைமைப் பொறுப்பாளராக இருந்த திரு. அரியரெத்தினம் அவர்கள் மாற்றலாகிச் சென்றபின்னர் பல வழிகளிலும் பாடசாலை தரம் குன்றி வந்ததென்றே சொல்லவேண்டும். பல மாணவர்கள் யாழ்ப்பாணம் நோக்கிப் படையெடுக்க ஆரம்பித்துவிட்டனர். பொருளாதார வசதி படைத்த மாணவர்கள், யாழ். நகரிலுள்ள பாடசாலைகளையே தெரிவுசெய்ய ஆரம்பித்துவிட்டனர். அதற்கு சில முக்கிய காரணங்களுண்டு. யாழ்ப்பாணத்தில் சிறந்த கல்விமுறை என்ற எண்ணம். யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொரு தெருவிலும் உயர்தர, சாதாரண தர தனியார் கல்வி நிறுவனங்கள் உருவாகியிருந்தமை. உதாரணமாக. . . . . எமது பாடசாலையில் கற்பித்த பல ஆசிரியர்கள், பல கல்வி நிறுவன விரிவுரையாளர்களாக அங்குகடமை யாற்றினர். இதனால், அரச சம்பளத்தோடு, இன்னும் பல மடங்கு பணம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாயிருந்தது. ஒவ்வொரு தனியார் கல்வி நிறுவனங்களும், நிரம்பி வழிந்தன. பாடசாலையில் ஒழுங்காக படிக்கிறோமோ இல்லையோ, தனியார் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று வருவது ஒரு பாசனாக (போலிக் கௌரவமாக) இருந்தது. இதனால், பிரயாணச்செலவுகள், நேரச் செலவுகள் இவைகளைக் கணக்கெடுத்து அதிகமானவர்கள், யாழ். நகரப் பகுதிகளிலேயே வீடுகள் எடுத்து, தங்கி படிக்கத் தொடங்கி விட்டனர். இப்படியொரு காரணமிருந்தாலும், பாடசாலை நிர்வாகத்திலும் ஒரு சிறு தேக்கத்தன்மை இருந்ததென்றே சொல்லவேண்டும். பல திறமைபடைத்த ஆசிரியர்களின் வெளியேற்றத்தின் பின் அதிகமான உள்ளூர் ஆசிரியர்களே கடமைக்குட்படுத்தப்பட்டனர். இதற்கு, அரசியல் சக்திவாய்ந்த சிலரது அதிகார துஷ்பிரயோகமும் ஒரு அடிப்படைக் காரணமாய் இருந்திருக்கிறது.

பாடசாலையின் முன்பக்கத்தில், உள்ள மைதானம் சுற்றிலும் போடப்பட்டுள்ள தார் றோட், செழித்து வளர்ந்திருந்த மரங்கள் இவைகள் யாவும் இயற்கையான கலைநயத்துடன் இருந்தமையால், என்றென்றும் புதுப்பொலிவோடு திகழ்ந்ததெனலாம். அப்படி பொலிவு கொடுத்துக்கொண்டிருந்த மைதானத்தின் ஒரு பகுதியில் பின்னர் ஒரு நூல்நிலையம் நிறுவப்பட்டு மைதானம் எங்கோ ஒரு சனசந்தடி இல்லாத இடத்தில் அமைக்கப்பட்டது. இந்நடவடிக்கையானது, ஆகக்குறைந்தபட்சம் அன்றைய நிர்வாகத்திடம் கலை நயம் இல்லாதது மட்டுமன்றி, விளையாட்டுத் துறையின் ஆர்வமின்மையையும் அதன் தாற்பரிய மின்மையையும் சுட்டிக்காட்டுகிறது. நூல் நிலையம் பாடசாலையின் மிகமிக அவசியமானதொன்றுதான். ஆனால், அதற்காக தெரிவுசெய்யப்பட்ட இடம்தான் பொருத்தமற்றது. பாடசாலையைச்சுற்றி பல ஏக்கர் நிலங்கள் கட்டாந்தரையாக இருந்துள்ளது. அவைகளின் உரிமையாளர்களை சம்பந்தப்பட்டவர்கள் உரியமுறையில் சரியாக அணுகியிருந்திருந்தால், நிச்சயம் அவர்கள் மனமுவந்து தங்கள் ஆதரவைத் தந்திருப்பார்கள்.

வேலணை மத்திய மகா வித்தியாலயம் என்பதே கணிசமான பெரிய பெயர்தான். அத்தோடு இன்னும் இரண்டு பெரிய பெயர்கள் இணைத்திருப்பது அனாவசியமென்றே கருதுகிறேன். இப்பெயர் களுக்குரியவர்கள் பாடசாலை வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்திருக்கலாம். அதற்கு நாம் நன்றிக்கடனுடைய வர்களாய் அவர்களது பெயரில் நூல் நிலையமோ, விளையாட்டு மைதானமோ, ஒரு விழா மண்டபமோ கட்டி அவர்களைப் பெருமைப்படுத்தியிருக்கலாம். அதற்காக, பாடசாலையின் பெயரை மாற்றுவதென்பது அழகான செயலல்ல! அசல் சுய விளம்பரம் மட்டுமன்றி, அதிகார துஷ்பிரயோகமுமாகும். இப்பேர்ப்பட்ட குறுகிய மனப்பான்மைகொண்ட பார்வைகளும் பாடசாலையின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக அமையு மென்பது எமது தாழ்மையான கருத்து.

பல்லாயிரக்கணக்கான மாணவ, மாணவிகளின் பூப்பாதங்கள் தவழ்ந்த எமது பாடசாலை, கடந்த 8 வருடங்களாக சிறிலங்கா இராணுவத்தின் சப்பாத்துக் கால்களால் மிதிக்கப்பட்டு சகதிகளாகிவிட்டன. தற்போது பாடசாலை, நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். பாடசாலையைச்சுற்றி புதைக்கப்பட்டிருக்கும் ஆயிரக்கணக்கிலான மிதி வெடிகள் இன்னும் எத்தனை எம் மாணவ மணிகளின் கால்களையும், உடல்களையும் பிய்த்து எறியப்போகிறதோ! காலம்தான் பதில் சொல்லவேண்டும்.

எம்தேசத்தில் இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மக்களின், எதிர்கால சந்ததியினரின் கல்வி, கலாச்சாரம், விளையாட்டு இன்னும் பலவும் வளம்பெற, உலகத்தின் மூலைகளிலெல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும் படித்தவர்கள், சமூகத்தின்பால் பற்றுக்கொண்டவர்கள், அனைவரும் தங்கள் பங்களிப்பைச் செய்து, ஒரு குடும்பம், ஒரு கிராமம், ஒரு சாதி என்கின்ற குறுகிய மனப்பான்மையை, அழித்துவிட்டு நம்தேசம், நமது மக்கள் என்னும் பரந்த பார்வையினோடு தீவகத்திற்கே உரித்தான இந்தப் பாடசாலையை மேலும் வளர்த்தெடுக்க பாடசாலை நிர்வாகத்தினருடன் நாமும் சேர்ந்து ஒற்றுமையாய் இணைந்து செயல்படுவோம்.

o



படிப்பகம்

www.padippakam.com



# எனது கல்லூரிக் காலத்தில்

சிறு வயதில் நாங்கள் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்கும் போதே. வீட்டில் சொல்வார்கள், சோதனை வடிவாக பாஸ் பண்ணி இங்கிலீசுப் பள்ளிக்கூடத்துக்கு (வேலணை மத்திய மகா வித்தியாலயத்தை அப்படித்தான் பெற்றோர்கள் அழைப்பார்கள்) போக வேணும். ஆகவே பாடசாலையிலிருந்து சில யார் தூரத்தில் வாழ்ந்தாலும் பாடசாலையைப்பற்றி ஒரு பிரமையும் நாங்களும் போய்ப் படிக்க வேண்டும் என்ற ஆதங்கமும் இருந்து கொண்டே இருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது. எனது மாமா பத்மநாதன் சொல்வார் 45ம் ஆண்டு தென்னோலையால் வேய்ந்த ஒரு நீளமான கொட்டிலில் சேர். வைத்திலிங்கம் துரைசுவாமியின் முயற்சியால் இப்பள்ளிக்கூடம் உருவாகியதென்றும் கல்லூரியின் முதல் அதிபராக திரு. A.K. கந்தையா B.A. அவர்கள் ஏற்றுக் கொண்டார் என்றும் தாங்கள் மிகவும் வசதி குறைவான சூழ்நிலையில் கல்வி கற்றதாகவும் கூறுவார். அத்துடன் இக்கல்லூரியிலிருந்து முதல் முறையாக மூன்று மாணவர்கள் சிரேஷ்ட தராதரப் பத்திர பரீட்சையில் தோற்றி மிகவும் திறமையாக சித்தி யடைந்தார்கள். அவர்கள் திருவாளர். இ. குருசாமி, E.K. நாகராஜா, இராசதுரை ஆகியோராவர். இவர்களுள் E.K. நாகராஜாவிடம் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது.

உதைபந்தாட்டப் போட்டிகள், விஞ்ஞானப் பொருட்காட்சிகள் என்பன தன்னலங் கருதாத ஆசிரிய ஆசிரியைகளால் ஊக்குவிக்கப் பட்டு நடாத்தப்படும். யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுடனும் உதை பந்தாட்டப் போட்டிகள் நடைபெறும். அப்போது எந்நேரமும் பாடசாலை முன்னேற்றத்தைப்பற்றியே சிந்திக்கும் ஆசிரியர்கள் கற்பித்துக்கொண்டிருந்தனர்.

நாங்கள் வேலணை மத்திய மகா வித்தியாலயத்துக்கு அனுமதி பெற்று சைவப்பிரகாச வித்தியாசாலையிலிருந்து அணிவகுத்துச் செல்லும் போது ஒரு பக்கம் பயமும் மறுபக்கம் மகிழ்ச்சியுமாக ஏதோ பெரிய சாதனை செய்து விட்டோமென்ற பிரமை ஏற்பட்டது. அப்பொழுதுதான் சில குறிப்பிட்ட ஆசிரியர்களின் அறிவையும் ஆற்றலையும் காணக்கூடியதாக இருந்தது. முக்கியமாக திருமதிகள். வேலுப்பிள்ளை, சுந்தரலிங்கம், நல்லதம்பி, ஐ. கந்தையா, கேதாரநாதன், அழகரட்னம், திருவாளர்கள். E.K. நாகராஜா, சோமாஸ்கந்தன், பொன்னுத்துரை, சண்முகநாதன், பஞ்சாட்சரம், வேலாயுதம், இராசையா, கந்தையா போன்றவர்களைக் குறிப்பிடலாம். திரு. E.K. நாகராஜா மாஸ்ரரிடம் கல்வி கற்கும் போது அவரின் கடுமையான கண்டிப்பையும் உண்மையான கனிந்த சுபாவத்தையும் காணக்கூடிய சந்தர்ப்பங்கள் எனக்கு ஏற்பட்டது. ஒரு தடவை term fees கட்ட சுணங்கியபோது என்னை அழைத்து «ஏதும் பிரச்சனையா? நான் இப்ப கட்டிறன். பிறகு நீர் தரலாம்» என்றார்.



படிப்பகம்

www.padippakam.com

இவரின் காலத்தில் இல்ல விளையாட்டுப் போட்டி நடந்தால் முதல் நாள் இரவு சோடனை செய்வதற்குப் போனால் அவர் தனது காரில் தேனீர், வடை எல்லாம் கொண்டுவந்து தருவார். எப்போதும் நேர்த்தியாக சலவை செய்யப்பட்ட வெள்ளை வேட்டியும் சேட்டும் அணிந்திருப்பார். இவரைப் போலவே திரு. பஞ்சாட்சர மாஸ்ரரும் வெள்ளை வேட்டியும் சேட்டும் அணிந்து கொண்டு வருவார். ஆங்கிலம் படிப்பிக்கத் தொடங்கினால் அவரின் உச்சரிப்புக்காக சத்தம் போடாமல் இருப்போம். அவரது கம்பீரமான தோற்றத்தைப்போலவே தொனியும் கம்பீரம்.

எல்லாத் தீவுகளிலிருந்தும் பிள்ளைகள் போக்கு வரத்து கஷ்டங்களிடையிலும் வந்து படிப்பார்கள். அத்துடன் எங்கள் பிள்ளைகள் நகரப் பாடசாலைக்குப் போனால் கெட்டுப்போக வழி உண்டு. ஆனால் இங்கு அப்படியல்ல. எல்லோருக்கும் எல்லோரையும் தெரியும் என்ற காரணத்தினாலும் தீவுகளுக்குள் பெரிய கல்லூரியாகத் திகழும் வேலணை ம.ம.வி. க்கு பிள்ளைகளை அனுப்ப பெற்றோர்கள் விரும்பியதில் ஆச்சரியம் இல்லை. மிகவும் தூரத்தில் இருப்பவர்கள் கல்லூரி விடுதியில் தங்கி படிப்பார்கள். எங்கள் காலத்தில் 400 மாணவ, மாணவிகள் விடுதியில் தங்கி படித்தார்கள் என்றால் பாடசாலையின் தரத்தை எடை போடலாம். பிந்தி வராமலும் முந்திப் போகாமலும் சரியான கடமை உணர்வு உள்ளவர்கள் அன்றைய ஆசிரியர்கள். அவர்களிடம் கல்வி கற்றதனால்தான் இலங்கையிலும், உலகெங்கிலும் முன்னேற்றத்துடனும் உயர்ந்த எண்ணத்துடனும் உதவி செய்யும் மனப்பான்மையுடனும் சேவை புரிந்து வருகிறார்கள்.

மேலும் 1980ம் ஆண்டு இதன் பெயரை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய ம.வி. என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது இது கைவிடப்பட்டதாக அறிகிறேன். எங்களுக்கு கல்வி கற்றுத் தந்தவர்களின் தன்னலமற்ற சேவையில் கொஞ்சமாவது தற்போது உள்ளவர்களிடம் இருப்பதனால்தான் உலகம் நல்ல நிலையில் இயங்கிக்கொண்டிருக்கிறதோ என்னவோ. எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது, விடுதியில் தங்கி இருக்கும் ஆசிரியர்கள் சனி, ஞாயிறு களில் பள்ளிக்கூடத்துக்கு வந்து முறிந்த வேலிகளைச் சரிப்படுத்தி மரங்கள் நட்டு ஆக்கபூர்வமான வேலைகளில் ஈடுபடுவார்கள். மாணவர்களைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவைக்க வேண்டிய பொறுப்பு பழைய மாணவர் சங்கங்களுக்கு உண்டு. பாடசாலையுடன் ஒப்பிடும்போது நாங்களோ எமது முகவரிகளோ முக்கியமல்ல. அதன் வளர்ச்சியும் அதன் மாணவர்களின் வளர்ச்சியும் தான் முக்கியம். இன்னும் ஒன்றையும் நாம் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம். இப்போதுள்ள இக்கட்டான நிலையிலும் பாடசாலையில் கல்வி கற்பிக்கும் திருவாளர்கள் ஈசன், கணேசலிங்கம், கலாதரன், ஆரூரன் இன்னும் பலரையும் நினைவு கூர வேண்டும். மேலும் அண்மையில் காலம் சென்ற திரு பொ. கேதாரநாதனின் பணியும் நினைவு கொள்ளத் தக்கது. எங்கள் காலத்தைப்போல் திரும்பவும் எம் பாடசாலை நிமிர்ந்து சேவை புரிய வேண்டும். நாம் அதைப் போய்ப் பார்த்து பூரிப்படையவேண்டும். யாரோ ஒருவர் சொன்னது போல் «வருடத்தில் ஒருநாள்தான் மெழுகு வர்த்தி கொழுத்தி தியானிப்பேன், அது கடவுளுக்காகவல்ல, பல வாறான நோய்களுக்கு மருந்து கண்டுபிடித்த விஞ்ஞானிகளை நினைத்து» என்றார். அதே போல எமது கோவிலான கல்லூரி பிரச்சனைகள் முடிந்து புது எழுச்சியுடன் புதுப் புது எண்ணங்களுடன் வருங்காலச் சந்ததிகளுக்கு வழிகாட்ட வேண்டுமென இறைவனை எல்லோரும் பிரார்த்திப்போமாக.

**நாகையா மகேந்திரன்**
*பழைய மாணவர்*
*பாரிஸ்.*



படிப்பகம்

www.padippakam.com

# வேலணை மத்திய மகா வித்தியால வளர்ச்சி

சைவப்பிரகாச வித்தியாசாலையில் தென் ஓலைக் கொட்டிலில் இயங்கி வந்த வேலணை மத்திய மகா வித்தியாலயம் அப்போது பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அல்பிரட் தம்பியையாவின் பெரு முயற்சியால் திரு. வி. தம்பு அவர்களின் காலத்தில் 1954ம் ஆண்டு அப்போதைய பிரதமர் சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்படட்தே தற்போது நாம் காணும் அந்த இரண்டு மாடிக் கட்டடம். அவர் ஞாபகார்த்மாக நாட்டிச் சென்றவைதான் அந்த மலைவேம்புகள்.

இவ் வேளையில் கல்வி கற்றுத் தேர்ந்தவர்களில் அதிபர். சி. காராளபிள்ளை, திரு. பொ. கேதாரநாதன், திருமதி. திருமகள் கேதாரநாதன், கணக்காளர் தியாகராசா, சட்டத்தரணி செல்வி. காந்திமதி இராமலிங்கம், - All Ceylon Tamil Teacher's Association - அகில இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க செயலாளராக இருந்து அகாலத்தில் மறைந்த திரு. பாலசுப்பிரமணியம், சைவப் புலவர் திருஞானசம்பந்தபிள்ளை — சைவப்பிரகாச வித்தியாசாலை தலைமை ஆசிரியராக இருந்தவர், சிவம் மாஸ்ரர், நரேந்திரன், காந்தன் — Architectural Student — ஆகியோரும், அடுத்து Engineer கோபாலபிள்ளை, கவிஞர் கங்கைவேணியன், Ceylon Central Bank உத்தியோகத்தர் சண்முகமணி, பிரபல வர்த்தகர் சரவணபவான், ஆசிரியர் அமரேசன், ஆசிரியை காந்திமதி நடராசா, யாழ். பல்கலைக் கழக பேராசிரியர் இரா. சிவச்சந்திரன், திருமதி. வேதவல்லி துரைராசா, —Samuel and Sons துரைராசா, ந. பாலசுந்தரம், பரமநாதன், இ. பாலசந்திரபிரசாத், சம்பந்தர் — காரைநகர், நாகமணி — அனலைதீவு, சிவஞானம் — அல்லைப்பிட்டி, பரமநாதன், நவரட்ணராஜா, அன்னபூரணம், சேதுகாவலர், சங்கரலிங்கம், மாணிக்கவாசகர் — மண்கும்பான், Paranthan Chemicals Corporation ஆறுமுகம் —, தயாபரன் — Police Department, லக்ஷ்மி — காரைநகர், பரமேஸ்வரி, சிவானந்தசோதி, செல்வராணி, ஆயுர்வேத வைத்தியர் கலைமகள், ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இக் கால கட்டத்தில் திரு. வி. தம்பு அவர்கள் அதிபராக இருந்த காலத்தில், திருவாளர்கள் சிவஞானம், பொன்னுத்துரை, ஏரம்பு, திருநீலகண்டம், கனகசபை, கந்தப்பு, இராசையா, கணேசலிங்கம், அலெக்சான்டர், திருமகள், டேவிட் இன்னும் பலரும் சிறப்பாக தமது கடமையை யாற்றி கல்லூரியின் முன்னேற்றத்திற்காக பாடு பட்டவர்களாவர்.



இக் கல்லூரி தீவுப் பகுதி முழுவதற்குமாக செயற்பட்டு வந்ததால் ஏழு தீவுகளிலிருந்தும் மாணவர்கள் வந்து விடுதியில் தங்கியிருந்து கல்வி கற்றார்கள். SSC வரை விடுதியில் தங்கி இருந்து கற்கும் மாணவர்கள் யாழ். ஸ்ரான்லி கல்லூரிக்கு HSC வகுப்புகளில் கல்வி கற்கச் செல்வார்கள். மேலும் JSC வகுப்பு முடித்ததும் பல மாணவர்கள் யாழ் கல்லுரிகளில் மேல் படிப்பைத் தொடர சென்று விடுவார்கள். புதிய கட்டிடம் திறக்கப்பட்ட பின்பும் இந்நிலையே தொடர்ந்தது. கலைப் பகுதி HSC வகுப்பு இந்திய நாகரீகம், சமஸ்கிருதம் ஆகிய பாடங்களை திருநீலகண்ட மாஸ்ரரும், பூகோளவியல் பாடத்தை கனகசபை மாஸ்ரரும், பொருளாதாரம் பாடம் பொன்னுத்துரை மாஸ்ரர் ஆகியோரின் போதிப்புடன் 1955ல் ஆரம்பிக்கப்பட்டது.

குடிமனைகள் கூடிக்கொண்டு வர விளைநிலங்கள் மறைந்துகொண்டு வந்த கால கட்டத்தில் இக் கல்லூரி பலரை அரசாங்க, தனியார் தொழில் நிறுவனங்களில் தொழில் புரியவும், மற்றும் சுய தொழில், வியாபார முயற்சிகளில் ஈடுபடவும் தயார்படுத்திக் கொடுத்தது. வசதி உள்ளவர்கள் மட்டுமே யாழ்ப்பாணம் சென்று கல்வி கற்கக் கூடிய நிலைமாறி ஏழை, எளியவர்களும் உயர் கல்வியில் முன்னேற்றம் காண இக் கல்லூரி ஏதுவானது.



படிப்பகம்

www.padippakam.com

1954 வரை கலைக் பாடங்களே போதிக்க கூடியதாக இருந்த நிலை மாறி விஞ்ஞானப் பாடங்களுள் தூய கணிதம், பொதிகம், இரசாயனம் ஆகிய பாடங்கள் 1955 முதல் ஆங்கிலத்தில் ஆரம்பிக்கப்பட்ட .பின்னர் தமிழில் போதனைகள் தொடர்ந்தது. அதேவேளை தட்டச்சு யந்திரப்பயிற்சி வகுப்புகளும், வர்த்தக கணக்கு பாடப் பகுதியும் மனை இயலும் ஆரம்பிக்கப் பட்டது. 1959ல் தாவரவியல், விலங்கியல் பாடத்திட்டங்களும் ஆரம்பிக்கப்பட்டன.

அன்றைய நிலையில் புதிய கட்டிடத்திற்கு இடம் மாறிய பின்பும் கல்லூரி வகுப்புகளுக்கான இடவசதி குறைவாகவே இருந்தது. மேடை அரங்கம் தட்டிகளால் பிரிக்கப்பட்டு பல வகுப்புகள் அங்கு நடைபெற்று வந்தன. அரங்க மேடையில் HSC கலை வகுப்பு நடைபெற்று வந்தது.

1955ம் ஆண்டு HSC கலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் என்.வீ.எஸ். பாலச்சந்திரன் தான் வேலணை மத்திய மகாவித்தியாலயத் திலிருந்து முதன்முதலாக 1962ல் பல்கலைக் கழக அனுமதி பெற்றவராவார். இவர் அரச மான்னியத்துடன் கல்வி பயின்று வந்தவர். தற்போது இவர் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளராக பணியாற்றி வருகிறார். மற்றும் இரா. சிவச்சந்திரன் வேலணையில் பயின்று யாழ்பாணத்தில் கல்வியைத் தொடர்ந்து பட்டதாரியாகி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக பணியாற்றி வருகிறார். திரு. தியாகராசா இக்கால கட்டத்தில் வேலணை மத்திய கல்லூரி மாணவராக விருந்து ரஷ்ய அரசின் பல்கலைக்கழக மாணவர்தேர்வில் சித்தி எய்தி ரஷ்ய அரசாங்க உதவியுடன் லூமும்பா பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுத் தேர்ந்தவர். இந்த பல்கலைக் கழக பிரதான கட்டிடம் அன்று ரஷ்யாவிலேயே உயர்த கட்டிடமாக இருந்தது. இது ஒரு 32 மாடிக் கட்டிடம். நான் ரஷ்யாவில் கற்ற காலத்தில் இவரை அங்கு பல்கலைக் கழகத்தில் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

**இன்று விரிவுரையாளராக இருக்கும் என்.வீ.எஸ். பாலச்சந்திரனுடன் எனக்கு கடிதத் தொடர்புகள் இருந்து வந்தது. அன்று அவர் கடிதங்களை கடல் மார்க்க கடிதங்களாகவே அனுப்புவார். காரணம் அன்றைய பொருளாதார நிலை அப்படி அமைந்திருந்தது. இவை அறுபதுகளில் நடந்தவை.**

அறுபதாம் ஆண்டளவில் G.C.E. (A/L) வகுப்புகள் திரு பொ. கேதாரநாதன் ஆசிரியரின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் விஞ்ஞான பிரிவிலிருந்து பலர் பல்கலைக்கழகம் செல்லத் தொடங்கினர்.
அமெரிக்க விண்வெளி ஆராச்சி நிலையத்தில் பொறியியலாளராகக் கடைமையாற்றும் திரு. மோகனச்சந்திரன், கொழும்பு தொலைத் தொடர்பு திணைக்களத்தில் உதவி அத்தியேட்சகராகக் கடைமையாற்றி தற்போது புறூணை தொலைத் தொடர்பு திணைக்களத்தின் பிரதம பொறியியலாளர் திரு. திருநாவுக்கரசு, உப அதிபர் அமரர் திரு. சடாட்சரசண்முகதாஸ், உப அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல், இலங்கை விவசாயத் திணைக்கள கணக்காளர் க. மகாலிங்கம், கனடாவில் பேராசிரியராகவிருக்கும் சமாலிங்கம் கணேசலிங்கம், வைத்தியகலாநிதி சமாலிங்கம் செல்வரத்தினம், கொழும்பு சுங்கத் திணைக்கள பிரதி இயக்குனர் திரு. சுந்தரமூர்த்தி, இலங்கை வங்கி திரு. கனகரட்ணம் ....

இப்படியாக எஞ்சினியர்கள், டாக்டர்கள், கணக்காளர்கள் உனத் தீவுப்பகுதி மக்கள் முன்னேற்றமடைய வழி வகுத்தது இக் கல்லூரி.

யா. பத்மநாதன்
முன்னாள் உற்பத்தி உதவி இயக்குனர்
களனி — இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்.



படிப்பகம்

www.padippakam.com

# Velanai Central College (Sri Lanka) Past Pupils and Well Wishers Association of Australia.

## வேலணை மத்திய கல்லூரி (இலங்கை) பழைய மாணவர்களினதும் நலன் விரும்பிகளினதும் கூட்டமைப்பு அவுஸ்திரேலியா.

யா/வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலாய பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை தனது ஐந்தாவது பராயத்தைப் பூர்த்தி செய்திருப்பதையறிந்து பெரு மகிழ்ச்சியடை கின்றோம். எமது தாய் நிறுவனம் வெள்ளி விழாவைக் கொண்டாட முடியவில்லை. எப்படியும் கோலாகலமாக பொன் விழாவைக் கொண்டாடத்தான் வேண்டும் என்று எண்ணிய வேளை ஆரம்ப நிலையிலும் பார்க்க பின்னடைந்திருப்பதை எண்ண சற்று மனவேதனைதான். ஆனாலும் உலகளாவிய ரீதியில் பரந்திருக்கும் நாம்- அவளது பிள்ளைகள். ஒருமித்து ஆதரித்து எமது சங்கங்கள் ஊடாக மீண்டும் தீவுப்பகுதிக்கு ஒளிகாட்டும் சிறந்த நிறுவனமாக எமது அன்னையை ஆக்க ஒன்று பட்டு உழைப்போமாக.

எமதருமை அன்னையின் ஐம்பதாண்டு நிறைவையொட்டி வெளியிடும் மலருக்கு எமதுநிறைவான நல்லாசிகள். பிறந்த இடத்தில் நிரப்ப முடியாத செயலை உங்கள் ஐந்தேஆண்டு பூர்த்தியான கிளையில் சிறப்பாக வெளியிட சிவகாமி சமேத நடராஜரா அருள்பாலிக்க வேண்டி அவன் கால் வணங்குகின்றோம். உங்கள் மலர் கல்லூரி வளர்ச்சீ நோக்கில் ஒரு சிறப்பான அடித்தளமாக அமைய எமது சிட்னி சங்கத்தினது நல்லாசிகள்.

மேலும் உங்கள் கிளை காலத்துக்குக் காலம் கல்லூரியின் தேவைகளையுணர்ந்து அவற்றைப் பூர்த்தி செய்து மேலும் மேலும் சிறப்பாக வளர்ச்சியடைய எமது இதயங்கனிந்த நல்வாழ்த்துகள்.



படிப்பகம்

# SHABARINA

## RESTAURANT

**Spécialités Indiennes**

லாச்சப்பலில் வரவேற்கிறது! உங்கள் சபறினா உணவகம்
சுவையான உணவுவகைகளை உடனுக்குடன்
சுவைத்து மகிழ்ந்திட

**சபறினா உணவகம்**

21, rue Cail, 75010 Paris
Tél: 01 42 05 05 68
M°: La Chapelle ou Gare du Nord

## VANASPATHY TEXTILES

தரமானவைகளைத் தேடி
அலைவீர்களாயின் தவறாது
நாடவேண்டிய புடைவை
மாளிகை

**189, rue du Fg Saint-Denis**
**75010 PARIS**
**Tél: 01 40 36 29 38**

## RAJI SAREE CENTRE

*WEDDING SAREE, CHURIDAR SETS,*
*IMMITATION ITEMS, COSMETIC ITEMS*
*AND GIFT ARTICLES*

மனம் நிறைவான விலை குறைவான
தரமான ஆடைகளை
தெரிவு செய்ய பாரீஸ் மாநகரில்
புடைவைமாளிகைகளின் தலை
நகரமாய் திகழ்வது

*205, Rue du Fbg Saint Denis*
*75010 Paris 10*
*Tél : 01 40 37 17 52*
*Fax : 01 40 36 67 92*

# V.S.Co

பிரான்ஸில் அனைத்து மளிகைப் பொருட்களையும் ஒரே இடத்தில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு மளிகை ஸ்தாபனம்

## வி.எஸ்.கோ

ஆசிய உடன் மரக்கறிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ள என்றும் நாடுங்கள்

**197, rue du Fbg. Saint denis, Paris 75010**
**Tél: 01 40 34 71 65**

## RESTAURANT FRANCO LANKA

**Specialites Indiennes**



25, rue Baudelique, 75018 Paris
M°: Simplon ou Jules Joffrin
Tél: 01 42 51 88 21



www.padippakam.com

# புறாணையிலிருந்து ஒரு வாழ்த்துச் செய்தி

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் தனது ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பூக்கும் மலருக்கு ஓர் இதழாக என் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகிறேன்.

«ஊர் ஓடின் ஒத்தோடு, ஒருவன் ஓடின் கேட்டோடு» என்பது பழமொழி. இன்று ஊரை விட்டே ஓடு என்றாகி விட்டது. ஏன்? எதற்கு என்பது எல்லோருக்கும் தெரியும். அப்படி ஓடிவந்தவர்கள், பெருமளவு அகதிகள் வாழும் நாடுகளாக பிரான்ஸ், ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகள் விளங்குகின்றன. இப் பெரு நாடுகளில் நாம் ஒன்று கூடி மக்களுக்கு உதவும் நோக்கோடு காரியம் ஆற்றுவது, விழா எடுப்பது என்பதென்றால் அளவிட முடியாத உழைப்பும், முயற்சியும் தேவை. அப்படிப்பட்ட முயற்சியின் பயனாக நடாத்தப்படும் விழாவிற்கும், வெளியிடப்படும் சிறப்பு மலருக்கும் எனது வாழ்த்துக்கள் மீண்டும்.

எமது மத்திய மகா வித்தியாலயம் பற்றிச் சொல்லப் போனால் அது எங்கும் பரந்து, விரிந்து, வளர்ந்து, வியாபித்திருக்கும் ஆலமரம். இக் கல்லூரி ஓலைக் கொட்டிலில் இயங்கும் போது நான் படித்துக் கொண்டிருந்தேன். பின் ஐம்பத்தி நான்காம் ஆண்டு புதிய கட்டிடத்திற்கு மாறியது. ஐம்பத்தி ஐந்தாம் ஆண்டு தான் முதன்முதலில் விஞ்ஞானக் கல்வி ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அந்த வகுப்பிற்கு Pre SSC என்று பெயர் (ஒன்பதாம் வகுப்பு). அந்த முதல் வகுப்பில் படித்த மாணவர்களில் நானும் ஒருவன். வகுப்பைத் தொடக்கி வைத்து படிப்பித்தவர் அன்றைய அதிபர் காலம் சென்ற திரு. தம்பு அவர்களாவர். இரசாயனம், பௌதீகவியல் பாடங்கள் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாத காரணத்தினால் அந்த மகானே அவ்விரண்டு பாடங்களையும் படிப்பித்தார். அவர் நாட்டிய அந்தப் படிக்கல்தான் என்னைப்போன்ற பல பேர் இன்று இப்படி வாழ்வதற்கு முதற்கல்லாக அமைந்திருக்கின்றது.



இப்போது உலகம் முழுவதும் சிதறி பரந்து வாழும் சிலரையாவது இம்மலரின் மணம் சென்றடைய வேண்டும் என்பது எனது பேரவா.

செ. திருநாவுக்கரசு
ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர்
தொலைத் தொடர்பு திணைக்களம், கொழும்பு
பொறியியலாளர்
தொலைத் தொடர்பு திணைக்களம், புறாணை



படிப்பகம்

# DISNEY

**RESTAURANT**

இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை அனைவரும்

சுவைத்து மகிழ்ந்திட

# டிஸ்னி

அனைத்து உணவுவகைகளையும் ஓடருக்கு பெற்றுக்கொள்ளவும்
குறைந்த விலையில் நிறைந்த சேவை செய்வதும்
டிஸ்னி!

டிஸ்னி செல்ல முகவரி இதோ!!

**25, Rue Cali, 75010 Paris, Tél. 01 42 05 44 04**

*M°: Gare du Nord ou La Chapelle*

# தமிழாலயம்
# தமிழாலயம்
# தமிழாலயம்

ஐரோப்பாவின் ஒரே ஒரு புத்தகப்பூங்கா.

பல்லாயிரக்கணக்கான நூல்கள் விற்பனைக்கும் வாடகைக்கும்.
மற்றும் சஞ்சிகைகள், பத்திரிகைகள், மொழிபெயர்ப்பு,
அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்

# THAMILALAYAM

**39, bd de la chapelle, 75010 PARIS**

Tél: 01 42 05 71 49 Fax: 01 42 05 71 39

www.padippakam.com

# ASSOCIATION DES ANCIENS ELEVES DU COLLEGE ST. HENRI D'ILAVALAI – EN FRANCE

**யா/இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் — பிரான்ஸ்**

**OLD STUDENTS ASSOCIATION OF ST. HENRY'S COLLEGE ILAVALAI – FRANCE**

Regd N° : 141233811



## சில நினைவலைகள்....!

வேலணை மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின், ஐந்தாண்டு நிறைவு விழா ஒன்றுகூடலிலே, «வித்தியாலயம்» சிறப்பு மலர் மூலம், அதன் பழைய மாணவ மாணவிகளை வாழ்த்துவதில், எமது இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம், பெருமையடைகின்றது, பூரிப்படைகின்றது !

பல்வளம் பெருகிவாழ்ந்த வேலணையம்பதியின், மண்வளம் தெரிந்தவன் நான், அதுமட்டுமல்ல, இணைந்த அயற்கிராமம் «சுருவில்» இன் சொந்தக்காறன்கூட, என்ற ரீதியிலும், எமது சங்கத்தின் தலைவர் என்ற ரீதியிலும், உங்கள் அனைவரோடும், இந்த «இளமாலை» வேளைதனில், சில பசுமையான நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதில், மட்டிலா மகிழ்ச்சியடைகின்றேன்!!

அங்கு நிலமுள்ள மக்களாக இருந்தும், இன்று நிலமற்ற மக்களாக, நாமும் புலம் பெயர்ந்து, பல்வேறு நாடுகளில் தற்காலிக தஞ்சமடைந்து "அகதி" என்ற கௌரவ விருதோடு வாழ்ந்து வருகின்ற இந்தக்காலக்கட்டத்திலே, தங்கள் வித்தியாலயத்தின் புகழ் பரப்புவதோடு, அதன் புனர் வாழ்வுக்காகவும், மறுவாழ்வுக்காகவும், நேசக்கரம் நீட்டுவதை, மனதாரப்பாராட்டுகின்றேன்!!!

இன்றய மாணவ சமுதாயம், அங்கு கண்ணீரைக்கடலாக்கி, கனவுகளைப் படகாக்கி, தாம் தொடரும் கல்வி, விளையாட்டுத்துறைப் பயணத்தில், கரையொன்றைத் தோற்றுவிக்க, எமது சகோதரத்துவ பழைய மாணவ சங்கங்கள் இணைந்து செயலாற்ற வேண்டுமென்பது காலத்தின் கட்டளை!

சில சிந்தனைகள்! எமது இரு சங்கங்களுக்குமிடையே வலுசங்கையான, நெருங்கிய, பரஸ்பர ஈடுபாடுகள் இருந்து வந்திருக்கின்றன.

எமது 1994 – 1995 ஆண்டுவிழாவிலே, தங்கள் சங்கத்தலைவர், திருமிகு. Y. பாலகிருஷ்ணன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, மகிழ்வித்ததை இன்றும் நாம் நினைவிலிருத்திப் பார்க்கின்றோம் !

வேலணையைத் திரும்பிப்பார்க்கிறேன், பல வருடங்கள் பின்னோக்கி நடந்து பார்க்கிறேன் (1940 - 1948 வரை) ! நீச்சலடிக்கக் கற்றுத்தந்த வேலணை மேற்கு வேனாக்குளம், பஸ் பயணம் தந்த துரையப்பா ஐலன்ட் பஸ் கொம்பனி, ராசா வாத்தியார் பள்ளிக்கூடம், வண்டில்ச்சவாரி, அம்மன்கோயில் சப்பறம், தேர், பூங்காவனம் வாழைவெட்டு, வேலணைச்சந்தியூடாக சாட்டி சிந்தாத்திரை மாதாகோயில், வேலணைவாழ், என் சகமாணவர்கள் ! எவ்வளவு பசுமையான நினைவுகள்!

**காலஓட்டம் எம்மை எங்கெங்கோ எல்லாம் கொண்டு சென்றுவிட்டது! இருந்தாலும், திசை ஒன்று தெரிகின்றது, ஒளியொன்று உதிக்கின்றது, விடிவொன்று வருகின்றது ! மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடு திரும்ப முடியுமென்றால்?... எம் எண்ணங்கள் ஈடேற வாழ்த்தும்**

**உங்கள் அன்பில்**
**«முகத்தார்» எஸ். ஜேசுரட்ணம்**
(தலைவர் — ப. மா. சங்கம்)



படிப்பகம்

www.padippakam.com



# பூமியின் சுழற்சியையும் தாமதமாக்கும் எல் — நினோ (EL-NINO)

பருவ காலத்தின் மாற்றத்தினால்தான் நாட்கள் நகருவதில் தாமதம் ஏற்படுகிறது எனப் பலர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் இது எல — நினோ எனும் காலநிலை மாற்றத்தினாலே ஏற்படுகிறது என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித் துள்ளனர். எல் — நினோ வினால் உலகம் மெது வாக சுழலும் நிலை தோன்றியுள்ளது.

அமெரிக்க பௌதீகவியல் ஒன்றியம் அண்மையில் பொஸ்டனில் கூடியபோது, அதில்கலந்து கொண்ட ஆய்வாளர்கள் எல் — நினோவினால் வளிமண்டலத்தில் ஏற்பட்டுள்ள விளை வுகளைப் பற்றி குறைகூறியுள்ளனர். இவ்வளிமண்டல மாற்றத்தில் ஒரு செக்கன்டாக குறைக் கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

புவியிலிருந்து சக்தி வெளியேறி வளிமண்டலக்திற்குச் செல்வதால் பூமியின் சுழற்சியில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விண்வெளி விமான போக்குவரத்து நிலையத்தின் விஞ்ஞானி கலாநிதி ஜோன் கிப்சன் தெரிவித்துள்ளார்

1997 ஆம் ஆண்டு எல் — நினோ அதன் உச்சக் கட்டத்திலிருந்த போது பூமியின் சுழற்சியை 800 மைக்றோ செக்கனடினால் குறைத்திருந்தது என அவர் மேலும் தெரிவித்திருந்தார். தனது கணிப்பின்படி எல் — நினோவின் தற்போதைய நிலையில் பூமியின் சுழற்சி வேகம் 300 — 400 மைக்றோ செக்கன்டினால் குறைக்கப்பட்டிருக்லாம் என நம்பப்டுகிறது.
எல் — நினோவினால் நாட்கள் நகர்வது தாமத மடைவது முதற்தடவையல்ல. 1982 — 83ஆம் ஆண்டுகளிலும் எல் — நினோவினால் இத்தகைய விளைவுகள் இருந்த போதிலும் தற் போதைய நிலையில் குறைக்கப்பட்டுள்ளது போன்று ஒரு போதும் நடைபெறவில்லை என விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எல் — நினோ காலநிலையின் போது சமுத்திரத்தின் வெப்பநிலை கிழக்கு பசுபிக் கடலில் கூடுத லாகவும், மேற்கு பசுபிக் கடலில் குறைவாகவும் காணப்படும். ஈக்குவேடரில் வெள்ளம் ஏற்படு வதற்கும், இந்தோனேஷியாவில் அதிகளவு வெப்பநிலை ஏற்படுவத்ற்கும், கியுபெக்கில் பனிப் புயல் ஏற்படுவத்ற்கும், வடகிழக்கு அமெரிக்கப் பகுதிகளில் பவன அமுக்கத்திற்கும் எல் — நினோ காரணமென விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

பூமி மெதுவாகச் சுழலுவதனால் சாதாரண மனிதன் பாதிப்படையக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை எனக் கூறுகிறார் அமெரிக்க விண் வெளி நிலைய விமான இயக்குனர் ஆய்வுகூட கலாநிதி ஜீன் டிக்கி. எனினும் இதனால் கோள்களுக்கிடைப்பட்ட பாதையை முக்கியமாகச் செவ்வாய்க் கிரகத்திற்குச் செல்லும் பாதையைக் கண்டுபிடிப்பது கடினமாக இருக்கும் என இவர் மேலும் தெரிவித்தார்.

எல் — நினோ போன்றதொன்றுதான் லாநினோ. ஆனால் இது எல் — நினோவிற்கு நேர்மாறானது. இதனால் பூமி வேகமாகச் சுழன்று நாட்களைக் குறுகியதாக்குகின்றது. இதன் விளைவு களாலும் பூமிக்குப் பாதிப்பேற்படுகிறது என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.






படிப்பகம்

www.padippakam.com

# முத்தம் தருவாள் என் முத்தங்கள் என்று

### வெண்பா



செந்தமிழின் தூய்மை. சிவசமயம் சேர்தூய்மை
வந்தறிந்தோம் வேலணையூர்; வாழ்த்துகின்றோம் — சிந்தையிருக்
கொண்டென்பர் தாய்நாட்டுக் கோதில்சீர்ப் பேரறிஞர்
ஆண்டாண்டாய் மார்கழிவந்(து) ஆங்கு!

நாவலர்தம் மாணவராம் நல்ல பரம்பரை யொன்(று)
ஆவலராய் ஆங்குதமிழ் ஆட்சிசெய்தார் — பாவலர்கள்
ஏழ்பெரிய தீம்பொழில்கள் என்னும்சீர்த் தீவகங்கள்
சூழ்கலைசேர் நாப்பண் சுரப்பு!

சுரந்தளிக்கும் வேலணையூர் சேர்ந்தகல் லூரிச்சீர்
பரந்தளிக்கச் சேவை பலவாய் — நிரந்தரத்தாய்
காணிக்கை ஈந்துவகை காண்பழைய மாணவர்கள்
ஆணிப்பொன் சேய்கள் அவட்கு!

உள்ளம் துரந்தன் பொழுகத் திருக்கரத்தால்
அள்ளியுச்சி மோந்தளித்த அம்மைக்குத் — தெள்ளுதமிழ்த்
தேனாட்டி நுண்கலையாம் தேசொளிரும் ஆனந்தம்
தானாட்ட வாழ்கதனை யர்!

போரால் நனைந்து நடுங்கிப் புறம்பெயர்ந்தும்
சீராட்டி வாழ்வளித்த தெய்வத்தைப் — பாராட்டித்
தூமலர்கள் தூவித் துதித்துத் தொழும்புசெயக்
காமரர்கள் ஆக்கியவன் காண்!

### கட்டளைக் கலித்துறை

அடுக்காகும் இன்னற்(கு) இளையார் இளையார் அணுவளவும்
தொடுக்கின்ற சேவைகள் துன்ப மெதிலும் தொடர்ந்திடுவர்
முடிவறி யாதவர் என்றும் முனைந்து முகம்மலர்ந்து
பிடியள வாயினும் சேர்த்தவட் கர்சனைப் பேறுவப்பே!

கலைஞரைச் செஞ்சொலாற் கற்பனைப் பொற்குவை கண்டெடுக்கும்
நிலைஞரைத் தஞ்சமாம் நீர்மையார் வைத்திய நித்திலமாம்
தலைஞரை எண்ணியல் தக்கார் பொறியியல் தாங்குமெழிற்
சிலைஞரை ஈன்றொளிர் தெய்வத்தாய் பாதம் சிரம்கொளுமே!

பத்தியால் தாய்மையாள் பாடறிந் தேற்கும் பரிசெது வென்(று)
எத்திசை யும்முள ஏந்தல்கள் இன்றும் எடுத்துவக்கும்
சித்தியார் சேவைகள் சிந்தைக் கெடுப்பாள் சிலிர்த்துவந்து
முத்தம் தருவாள்என் முத்தங்க ளென்று முறுவலித்தே!

**பண்டிதர் ச. குமரேசையா**



படிப்பகம்

www.padippakam.com

# தலித் இலக்கியம்... வடிவம்...

தலித் இலக்கியம் என்ற வார்த்தை இன்று ஈழத்திலும் பரவலாகப் பேசப்படுகிறது. தலித் என்ற சொல் மராட்டி யிலிருந்து தமிழுக்கு வந்தசொல், இதைத் தமிழ்ப் படுத்திப் பார்ப்போமானால் <ஒடுக்கல்> என்றே பொருள் படும். தலித்இலக்கியம் ஒடுக்கப்பட்டவர்களின் பிரச்சினைகளை எடுத்தியம்பும் படைப்புகள். "தலித்" என்ற சொற்பிரயோகத்திற்கு முன் தமிழில் ஏற்கனவே றடுக்கப்பட்டவர்களுக்கான இலக்கியம் பல்வேறு வடிவங்களில் வெளிப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

வெளியே இருந்து வருபவை எல்லாம் தரம் என்று மதிக்கும், இரவல் வாங்கும் நாம் அண்மைக் காலமாக தலித் இலக்கியம் பற்றி ஆக்ரோசமாகப் பேசத்தலைப்பட்டிருக்கின்றோம். தீண்டாமையினால் ஒடுக்கப்பட்டவர்கள் படைக்கும் இலக்கியமன்று. அவர்தம் பிரச்சனைகள், யதார்த்த தன்மைக்கு உடன்பாடற்ற நிகழ்வுகள், ஒழிக்கப்படவேண்டும் என்பதெல்லாம் தலித் இலக்கியங்களே.
ஒடுக்கப்பட்டவர்களைத் தாழ்த்திப்பார்க்கும் மரபுரீதியிலான மனப் பதிவுகள் இன்று கலையத் தொடங்கியிருக்கின்றன.

இது உள்ளார்ந்த உணர்வு ரீதியிலான மனமாற்றமாகவு மிருக்கின்றது, மற்றையது பௌதீகவியல்க் காரணங்களினால் ஏற்பட்ட மனமாற்றமாகவுமிருக்கின்றது. பௌதீகவியல் காரணம் எனும்போது எமது போரால் ஏற்பட்ட அகதி புலம் பெயர்தல், சூழ்நிலை மாற்றம் ஆகியன வேயாகும்.

நீறு பூத்த நெருப்பாக இருந்த தலித் உணற்சிக் குரல்கள் படைப்புகள் இன்றைய யுத்தக்காற்றால் நீறுநீங்கிய நெருப்பாகக் கனல்கின்றது.

மரபுவழிவந்த தீண்டாமை பற்றிய மனப் பதிவுகள், பொருளாதார ஸ்திரமற்ற சொத்துடமை யில்லாத கட்டம் இந்த இரண்டு நிலைகளாலுமே தலித்துகள் மேலும் ஒடுக்கப்பட்டவர்களாக வளர வாய்ப்பாகவிருந்தது.

முதல்ச் சொல்லப்பட்டது பண்பு நிலமை. இரண்டாவது பொருள் நிலமை. இந்தப் பண்பு, பொருள் இவ்விரண்டும் இன்று ஓரளவு தளர்ந்து கொண்டிருப்பதை அவதானிக்கக்கூடியதாகயிருக் கின்றது.

பண்பு நிலையானது சமத்துவநிலைக்கு இறங்கிவர தலித் இலக்கியங்களே முன்னிற்கின்றன. பொருள் நிலமை சமத்துவநிலைக்கு வர யுத்தத்தினால் ஏற்பட்ட உயிர் வாழ்தலின் நெருக்கடி, அவலம், அகதி, புலம் பெயர்தல் ஆகியனவே காரணமாகுகின்றன.

பார்ப்பனனும் தாழ்த்தப்பட்டவனும் கைகுலுக்கிக்கொண்டால் சமத்துவம், மனமாற்றம் ஏற்பட்டதென்றோ, தலித் இலக்கியம் வெற்றி பெற்றதென்றோ பொருள் கொள்ளலாகாது. தாழ்த்திப்பார்க்கும் மரபுவழி வந்த மனப்பதிவுகளை தகர்த்துத் தணலாக்கி
சமத்துவ உணர்ச்சி இருசாரார் களுக்கிடையேயும் எழும் போதுதான் தலித் இலக்கியம் வெற்றிபெறும்.

தமிழகத்தில் ஈ.வே.ரா.பெரியாரின் பகுத்தறிவுப் பரப்பல், அம்பேத்காரின் தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைப் போராட்டம். இரண்டும் சமத்துவம் நோக்கிய இரண்டு திருப்பங்கள். எமது ஈழவிடுதலைப் போராட்டமும் ஈழத்தில் சமூக சமத்துவத்தை ஏற்படுத்துகின்ற மூன்றாவது திருப்பம். மனமாற்றத்திற்கான கருத்தியலைக் கொண்டு போய் மக்களிடம் சேர்ப்பது தலித் இலக்கியங்களே.

இதிகாசம், புராணம், வலிமையான மதக்கோட்பாடுகள் முதலியவற்றிடையே புகுந்து தாக்கவேண்டிய சூழ்நிலை இவ்விலக்கியங்களுக்கு உண்டு.

தலித் இலக்கியங்கள் பற்றி தனித்துப் பெரிதாக பேசப்பட்டுக் கொண்டிருந்தாலும் அதற்கென்றொரு தனிவடிவம் கிடையாது, தேவையுமில்லை. இவ் விலக்கியங்கள் பேணல் வடிவத்தை தள்ளி வீழ்த்தி ஏறிமிதித்து விட்டு யதார்த்த நிலையில் நின்று
புதிய நவீனத்துவப் போக்குடன் விடயங்களை எடுத்துச்சொல்ல வேண்டியிருப்பதால் எந்த வடிவத்திலும் எந்நேரத்திலும் தோன்றக் கூடியது, தோற்று விக்கவேண்டியது. ஆகவே தலித் இலக்கியங்கள் வடிவமற்றவை, வரை முறையற்றவை
இது ஒரு «அவசரசிகிச்சைப் பகுதி» «அவசரவடிவம்».

தலித்துகளுக்கான படைப்புகள் இருசாரார்களிடமிருந்தும் வரலாம். தமிழகத்தில் பாமா, மார்க்கு, விடிவெள்ளி, பூமணி, சிவகாமி, பா.இதயவேந்தன், ரவிகுமார் ஆகியோரின் படைப்புகளும், ஈழத்தில் கே.டானியல், டொமினிக்ஜீவா, எஸ். அகஸ்த்தியர்
போன்றோரின் படைப்புகள் தலித் இலக்கியத்தில் பேசும்படியாக அமைந்திருக்கின்றது. தலித் இலக்கியம் உடனடியாக விடுதலை பெற்றுத்தருமென்றோ, சமத்துவத்தை ஏற்படுத்தித் தருமென்றோ கூறிவிட முடியாது. சமத்துவத்தை நோக்கிய போராட்டத்தினை வளர்க்க உந்து சக்தியே இது. மனோரீதியான மாற்றத்தை கொண்டு வருவதற்கான கருத்தியல் போராட்டம். தாழ்த்தப்பட்டவர்களை நோக்கி இரு சன்னங் களையுடைய ஒரு முனையும் உயர்த்தப்பட்டவர்களினை நோக்கி இரு சன்னங்களையுடைய இன்னொரு முனைப்பையுமுடைய இரு முனைத்தாக்குதலே இவ்விலக்கியத்தின் போராட்டம். (பண்பு — பொருள்)

தாழ்த்தப்பட்டவர்களை அங்கீகரிக்கும் உயர்ந்தவர்களை மேலெழுப்பும் எல்லா விதிகளையும் தூக்கிப் போட்டுடைத்து சமத்துவம் நோக்கிய பயணத்தை தொடரட்டும் தலித் இலக்கியம்.

சு. கருணாநிதி



படிப்பகம்

www.padippakam.com

## ஆண் ஆடுகள்

தேடியலைந்து விசாரித்து ஒரு
தெருவில் ஒருவகையாய்க்
கண்டு பிடித்தேன் அந்தக்
கனவான் வீட்டை

புறோக்கர் தரகர் என
பழைய முறைபோய்
இங்கிலீஸ் இல
«ஏஜன்ஸி» எனச் சொல்லுவார்கள்
மகளுக்கும் பொருத்தமாக
மாப்பிள்ளை கேட்டேன்
படங்களுடன் யாதகமுமாய்
பல பல தினிசுகளில்
பல்வேறு நாட்டினராய்
பல பல விலைகளிலுமாய்
தவணை முறை கட்டண
தயாள குணங்களுடனும்
மேசையில் எடுத்துப்போட்டார்.
விலை பொருந்தா காரணத்தால்
விருப்பமின்றி இறங்கிவர
அவர் வீட்டிற்கு எதிரே
இறைச்சிக்கடை கண்டேன்.

வேலணையூரான்

## ஆராய்ச்சியாளர்கள்

பலர் கூடி நின்றனர்
பலமணி நேரமாய்
கையில் முட்டையுடன்

உருட்டி, குலுக்கி,
ஆட்டி, அசைத்து
உரசி, தட்வி
பரிசோதித்துக்கொண்டு...

முட்டையில்
ஆராய்ச்சி
செய்கிறார்களென
நினைத்தேன்.

நீண்ட
நேரத்தின் பின்
முடிவு சொன்னார்கள்.
«முட்டையில்
முள் இல்லையாம்.»

நான் முடிவெடுத்தேன்
அவர்கள்
ஆராய்ச்சியாளர்களல்ல...

# அமரர்

# கந்தையா மயில்வாகனம்

B.Sc.

**எமது கல்லூரியில் ஆசிரியப்பணியாற்றி**
**பலர் உய்ய வழிவகுத்தவர்.**

**தன் இறுதிக்காலத்தை கனடாவில் கழித்த இவர் 1995ம்**
**ஆண்டு எம்மைவிட்டு பிரிந்துவிட்டார்.**

**அன்னாரது சேவையையும் மலர் வெளியிடும்**
**இக்கணத்தில் நன்றியுடன்**
**நினைவு கூருகிறோம்.**





படிப்பகம்

www.padippakam.com

# அறிவுப்பயிர் வளர்த்த அன்னை

செல்லையா — தேவன்

செந்நெல்லும் புகையிலையும்
தேர்ந்த பயிர்ச் செய்கைகளும்
சேந்து மணம் பரப்பும்
மருதம் சூழ்நிலப்பரப்பில்
மகத்தான ஓர் கலைக்கூடம்
வேம்போடு சஞ்சீவி
மருத மொடு மலை வேம்பு
முன்றலை அலங்கரிக்க
ஆடல்க் கலைத்தெய்வம்
நடராசன் கொலுவிருக்க
சுந்தரமாய்க் காட்சிதரும் — வேலணை
மத்திய மகாவித்தியாலயத் தாயே — நீ
ஆயிரமாயிரமாய் ஆண்டுதோறும்
பெற்றெடுக்கும் பிள்ளைகட்கு
அன்புப் பாலூட்டி
அறிவுப் பயிர்தான் வளர்த்து
அவரவர் தாம் விரும்பும்
துறைகளில் தேறவைத்து
ஆற்றல் மிகு ஆசானாய்
அன்பு மிகு மருத்துவராய்
பொறியியல் நிபுணராய்
புகழ்பெறு கவிஞ்ஞராய்
அரசியல் மேதைகளாய்
ஆன்மீக ஞானிகளாய்
தொழில் சார் வல்லுனராய்
பூமிக்கு உவந்தளித்த
புண்ணியத்தால் உந்தனுக்கு
பாரிசிலும் விழாக் கோலம்
பூணவைத்தாய்தாயே
தீவகத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்திட்ட எங்கள் தாயே
இன்றோ காலம் செய் கருச்சிதைவால்
நீயும் இடம் பெயர்ந்தாலும்
தொடரும் உன் ஆத்மார்த்த சேவைதனை
எண்ணித்தினம் மகிழும் நாம் — நீ
அகல வேரூன்றி ஆழக்கால்பதித்த
அந்த அடுக்கு மாளிகையில்
மிடுக்கோடு மீண்டும் வந்த மர்ந்து
அகிலமது சிறக்கும்வகை அறிவுச்சுடரேற்ற
இறையருள் தான்வேண்டி
வாழ்வில் மீண்டும் வாராத
பள்ளி வாழ்வின்
பசுமைதரு நினைவுகளை
பாங்காக மனதிருத்தி அமைகின்றேன்
தொடரட்டும் உன்சேவை
பரவட்டும் உன்புகழ் நானிலத்தில்.



படிப்பகம்

www.padippakam.com

# பழைய கட்டிடத்திலேயே பொன் விழா கொண்டாட வழி சமைக்க வேண்டும் !

அண்மையில் கொழும்பு சுகததாச விளையாட்டு அரங்கு கோட்டலில் யாழ் வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கொழும்பு கிளைக்கூட்டம் நடைபெற்றது. இதில் அப்பாடசாலையில் பயின்று பல முன்னேற்றங்களை அடைந்துள்ள பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த கல்லூரியின் பழைய மாணவர்களான தொழில் நீதிமன்ற நீதிவான் இ.குருசாமி, கல்வி வலயம் 1, கல்விப் பணிப்பாளர் சு. இரட்ணராஜா ஆகியோருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. கூட்டத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவரும் சுங்கத் திணைக்கள உத்தியோகத்தருமான ஆர்.சுந்தரமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கல்லூரி பழைய மாணவர் சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இலங்கை வங்கி தலைமையக பிரதி பொது முகாமையாளர் எம். கனகரட்ணம் அதன் முதல் பிரதியை யுனைடெட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் அதிபர் எஸ்.பி.சாமிக்கு வழங்கி வெளியிட்டு வைத்தார்.

இக்கூட்டத்தில் உரையாற்றியவர்கள் கல்லூரியின் நிலைப்பாடு பற்றியும் அதன் வளர்ச்சியின் முக்கியத்துவம் பற்றியும் எடுத்துரைத்தனர்.

பழைய துயரங்கள் மீண்டும் ஏற்படலாம் என்ற அச்சத்தினால் புலம்பெயர்ந்தோர் பலர் இன்றும் சொந்த இடம் திரும்பாததால் தீவுப்பகுதி பாடசாலைகள் குறிப்பாக யாழ். வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலயம் குறைந்த எண்ணிக்கையைக் கொண்ட மாணவர்களைக் கொண்டே இயங்குகிறது ஆனால் கல்வி நடவடிக்கைகளில் அங்கு பாரியளவில் முன்னேற்றம் காணப் படுகிறது என்று
பல் கலைக்கழக புவியில் பேராசிரியர் என். வி. எஸ். பாலசந்திரன் தமதுரையில் தெரிவித்தார்.

மேலும் அவர், «எமது கல்லூரியின் பொன் விழாநிகழ்வுகள் பழைய கட்டிடத்திலே கொண்டாடப்படும் நிலை உருவாக பலதுறைகளிலு முள்ளோர் உதவவேண்டும்» என்றும் கேட்டுக் கொண்டார்.

யுனைட்டெட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் நிறுவனத் தலைவர் எஸ்.பி.சாமி உரையாற்றுகையில், குறைந்த காலங்களே நான் இந்த கல்லூரியில் படித்திருந்தாலும் பழைய மாணவர் என்ற முறையில் சகல துறைகளிலுள்ளோரும் தங்கள் ஒத்துழைப்பை வேலணை மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கும், தீவுப்பகுதி மக்களின் கல்வி மேம்பாட்டுக்கும் நல்கி உதவிபுரிய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

முன்னாள் கல்லூரி அதிபர் திருமதி கேதாரநாதன் உரையாற்றுகையில், பிரான்ஸ் போன்ற வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர்கள் கல்லூரியின் வளர்சசிக்கு உதவி புரியத் தயாராக விருக்கின்ற வேளையில், கொழும்பிலுள்ளோர் பெரிதாகக் கல்லூரி



படிப்பகம்

www.padippakam.com

*வளர்ச்சியில் அக்கறை செலுத்துவதில்லை. இந்நிலை மாறவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.*

*சங்கத்தின் எதிர்காலத் திட்டங்களாகப் பின்வரும் விடயங்கள் விதந்துரைக்கப்பட்டன.*
* *வெளிநாட்டு பழைய மாணவர்களின் ஒத்துழைப்போடு புலமைப்பரிசில் திட்டமென்றை செயல்படுத்தல்.*
* *பரிசளிப்பு விழா.*
* *ஆக்கத்திறன் ஊக்குவிப்பு.*
* *கல்லூரியைச் சேர்ந்தக் கட்டடத்தில் இயங்கவைக்க முயற்சி மேற்கொள்ளல்.*
* *வேலணை மத்திய கல்லூரியை ஒரு தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்த பாடுபடல்.*

*நடப்பு வருட நிர்வாகக் குழுத்தெரிவில் தலை வராக ஆர்.சுந்தரமூத்தியும், செயலாளராக சுவராஜனும், பொருளாளராக அருந்ததவநாதனும் தெரிவுசெய்யப்பட்டனர். உபதலைவர்களாக எம்.கனகரட்ணம். வேலணை வேணியன், குகநாதன் ஆகியோரும் செயற்படுவர் . உபசெயலாளராக பி.கந்தசாமியும் தெரிவு செய்யப்பட்டனர். சங்கத்தின் போஷகர்களாக எஸ்.பி.சாமி, வேலணை வீரசிங்கம், கணேசலிங்கம் (தற்போதைய அதிபர்) ஆகியோருடன் 13 பேர் கொண்ட நிர்வர்க சபையும் தெரிவு செய்யப்பட்டது.*
*நன்றி — தினக்குரல்*



கூட்டத்தில் உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழக. புவியியல்துறை தலைவர் பேராசிரியர் பாலச்சந்திரன், யுனைட்டெட் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் நிறு வனத்தின் தலைவர் எஸ். சாமி, தில்லைச்சிவன், முன்னாள் கல்லூரி அதிபர் திருமதி. கேதாரநாதன், தியாகராஜா ஆகியோரையும் மற்றும் எம்.கன்னரட்ணம், ஆர். சுந்திரமூர்த்தி ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## அண்மைய செய்தி :

**இதுவரை ஸ்ரீ லங்கா அரசபடைகளின் பாவனைக்குப்பயன்படுத்தப்பட்டிருந்த எமது கல்லூரிக் கட்டிடம் எதிர்வரும் 1998 ஆடி 15ம் தேதி மீள கையளிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.**



படிப்பகம்

www.padippakam.com

# VELANAI MADYA MAHA VIDYALAYAM
## Old Students Association - Canada

# வாழ்த்துச் செய்தி

வேலணை ம.ம.வி. பழைய மாணவர் சங்கத்தின் பிரெஞ்சுக் கிளையினது ஐந்தாவது ஆண்டுச் சேவை நிறைவினைக் குறிக்கும் வகையில் வெளியிடப்படவுள்ள மலருக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் எல்லையில்லாத மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்றைய யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட எமது சகோதர மாணவர்களின் துயரை நீக்கி அவர்களது அறிவுப் பசியைப் போக்கத் தங்களது இயந்திர கதியான வாழ்க்கைக்கு மத்தியிலும் தங்களின் நாளாந்த தேவைகள் போன்றே அவர்களது தேவைகளையும் கருதி முன்னர் யாழ்ப்பாணம் நோக்கி இடம் பெயர்ந்த மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும் தற்போது மீண்டும் சொந்த மண்ணிற்குத் திரும்பிய நிலையில் தமது கல்வியைத் தொடர முடியாமல் மிகவும் துன்பம் நிறைந்த சூழலில் வாழும் எம் சகோதரர்களுக்கு உதவிக் கரம் நீட்டி, உரிமையுடனும், மனித நேயத்துடனும் தங்களது சங்கம் முன்னின்று செயற்பட்டுப் பல மகத்தான பணிகளை ஆற்றித் தனது ஐந்தாவது அகவை கண்டு மகிழ்வுடனும் நிறைவுடனும் நிமிர்ந்து நிற்பதைக் கண்டு மனம் நெகிழ்கின்றேன்.

எமக்கு அன்று அறிவையும் ஒழுக்கத்தையும் ஒருங்கே ஊட்டி வளர்த்து, ஆற்றலில் சிறந்தோராக்கி இன்று உலகமெங்கும் உள்ள தன் தவப் புதல்வர்களால் தனிப்பெரும் புகழைப் பெற்றுக் கொண்டிருக்கும் எமது அன்னையின் துயர் துடைக்க எமது கல்லூரி மீண்டும் நிர்வாகத்திடம் கையளிக்கப்பட விருக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் அனைவரும் ஒற்றுமையுடன் ஒன்று சேர்ந்து செயற்படுவோமாக.

இறுதியாக இந் நிறுவனத்தின் வளர்ச்சிக்காகத் தன்னலங் கருதாது உழைத்தவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் இந் நிறுவனத்தின் சேவைகள் முனைப்புடன் தொடர மனதார வாழ்த்துகின்றேன்.

நன்றி

உண்மையுள்ள
சி. இளஞ்செழியன்
B.Sc. (Cey.), B.Eng. (Canada)
தலைவர்
வேலணை ம.ம.வி. பழையமாணவர்சங்கம் — கனடா
ரொரன்ரோ, கனடா



படிப்பகம்

www.padippakam.com

# எமது தேசத்தின் மீது படிந்துள்ள துயரங்களிலிருந்து நாம் அந்நியப்படமுடியாது

வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளையினரால் அண்மையில் ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்று நடைபெற்றது.

பாடசாலை வரலாறு, ஆய்வுரை, கருத்துரை, நகைச்சுவை நிகழ்ச்சிகள் என பல நிகழ்ச்சிகள் எம் தேசத்து கிராமிய மணம் மாறாது அந்த நினைவுகளோடு வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஒன்றுகூடலை ஆரம்பித்து வைத்த தலைவர் வை. பாலகிருஷ்ணன் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்தமைக்கான காரணத்தையும் ஒன்று கூடலின் அவசியத்தையும் எடுத்துக் கூறினார். எம் தேசத்தை விட்டு பல்லாயிரம் மைல்கள் கடந்து வந்து வாழ்ந்தாலும் எமது தேசத்தின் மீது படிந்துள்ள துயரங்களில் இருந்து நாம் அந்நியப்பட முடியாது என்றும் எமது கிராமத்தில் நாம் வாழ்ந்த வாழ்க்கை முறைகளை மீண்டும் மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வது அவசியம் என்றும் இப்படியான சங்கங்களை நாம் மட்டும் உருவாக்கியதல்ல யூத இனங்கள் திட்டமிட்டு னெங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்ட போதும், குர்தீஷ் இன மக்கள் அழிக்கப்பட்டபோதும் ஆங்காங்கே அகதிகளாக வாழ்ந்த மக்கள் தம் தேசத்து வாழ்க்கையை மறந்து விடாது இது போன்ற சங்கங்கள் அமைத்து தம் தேசத்து மக்களை இணைத்து வந்துள்ளார்கள் என்று தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலையின் வரலாறு பற்றி யா. பத்மநாதன் உரையாற்றினார். தொடர்ந்து இளைப்பாறிய அதிபர் சி. காராளபிள்ளை தமது சிறப்புரையில் பாடசாலை ஓலைக் கொட்டிலாக இருந்த காலத்தில் தான் படித்த நாட்களில் ஏற்பட்ட அனுபவத்தை மிகவும் சுவைபடக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து «முகத்தார் வீடு» யேசுரட்ணம், திரைப்பட இயக்குனர் ஏ.ரகுநாதன், «முகம்» அருந்ததி, இயக்குனர் கீழ்க்கரவை பொன்னையன் மற்றும் கிறகரி தங்கராசா போன்றவர்களும் சிறப்புரை ஆற்றியதோடு ஒன்று கூடலை வாழ்த்தியும் வரவேற்றும் பேசினர்.

இதனைத் தொடர்ந்து «ஒழுக்கம்» என்ற தலைப்பில் ஆய்வரங்கம் நடைபெற்றது. இவ் ஆய்வு அரங்கத்தை திரு. சு. வாசுதேவன் நகர்த்திச் சென்றார். இவருடன் திரு. றாயாகரன், திரு. சி. மனோ ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன் வைத்தனர். ஒழுக்கம் என்கின்ற ஆய்வு மிகவும் கனதியானதும் கடினமானதுமான விடயமாக இருந்ததினால் முழுமையான ஆய்வை நடாத்த முடியாமல் இருந்தது பெரும் குறையாக இருந்தது. இருப்பினும் இவ் வாதம் பலருக்கு அவரவர் மனதுக்குள் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று சொல்லலாம்.

மிகவும் கனமான விடயத்தை உள்வாங்கி சற்று களைப்பிலிருந்தவர்களுக்கு பின்னர் ஆரம்பித்த நகைச்சுவை நிகழ்ச்சி களைப்பை போக்கி ஒரு குதூகலத்தை ஏற்படுத்தியது. வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்களான அ. தேவதாஸ்இ தங்கம் சுந்தரலிங்கம் ஆகியோரது நகைச்சுவைத் துணுக்குகள் சகலரையும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. ஈபில் ரவர் அருகே இரண்டு தமிழர்கள் என்னும் நகைச்சுவைத் துணுக்கு சிரிப்பதற்கு மட்டுமல்லாது சிந்திப்பதற்கும் பல விடயங்களைத் தந்துள்ளது.என்றும் உளவியல் பூர்வமானதும் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளபட வேண்டியதும் என்றும் பல பார்வையாளர்கள் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து திரு. ரி. சாம்சன் அவர்களின் பல்குரல் நிகழ்ச்சி குழந்தைகள், சிறுவர்களை குதூகலத்தில் ஆழ்த்தியது.

பாடசாலையில் இளைஞர்கள் துள்ளித் திரிந்து படித்த மாணவர்கள் குடும்பங்களாகி குழந்தைகளோடு வந்து தங்கள் சக மாணவர்களுக்கு தத்தம் குடும்பங்களை அறிமுக்கபடுத்திய சம்பவங்கள் தொடர்ந்தும் அவர்களை இறுக்கமான இணைப்புக்கு பாலமாகி உள்ளது.

நன்றி — ஈழநாடு



படிப்பகம்

www.padippakam.com


MALA

மலிவுக்கு மறுபெயர் மாலா

22, rue Labat, 75018 Paris
**Tél: 01 42 62 01 23**
M°: Marcadet Poissonniers

88-90, Passage Brady,
75010 Paris
**Tél: 01 42 46 26 79**
M°: Chateau d"Eau

2, Place Roger Salengro
95100 Garges les Gonesse
**Tél: 01 39 93 93 48**
RER: Garges Sarcelles



ஸ்ரீ நாகபூசணி

ஓடியோ, வீடியோ கசற்றுக்களையும்
புடைவை வகைகளையும் வாங்கிக்கொள்ள
வசதியான இடம்

**SRI NAGAPOOSANIY** *(S.A.R.L)*
49, rue de Marcadet
75018 PARIS
M°: Marcadet Poissonniers
Tél & Fax : 01 42 54 99 05



VM

வதனி மஹால்

சுகாதாரம் - சுவை - மலிவு

*Vathani Mahal*
**17, Rue Labat, 75018 Paris**
M°: Marcadet Poissonniers
**Tél. 01 42 52 22 02**



AKIL S.A.R.L

அனைத்து விதமான புடைவை வகைகள்,
தங்க ஆபரணங்கள், ஓடியோ, வீடியோ
கசற்றுக்கள், அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தையும் ஓரே இடத்தில்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய
ஒரே இடம்

AKIL

189, rue du Fg. St. Denis,
75010 PARIS
Tél: 01 42 09 89 33
Fax: 01 42 09 89 44

*Come, Weave Your dream in Gols*




படிப்பகம்

www.padippakam.com

## கனடாத் தமிழ் உலகின் அபிமான ஏடு "நம்நாடு" பத்திரிகையின்

***பிரதம ஆசிரியர் கவிஞர் தீவகம். வே. இராஜலிங்கம் அவர்களது***

**வாழ்த்து மடல்.**

என் பாடசாலை நாட்களின் இனிய பொழுதுகளை ஒருகணம் இரை மீட்டுப் பார்கிறேன்.

கம்பீரமான கலைக் கூடத்தை தாயாய் பூஜித்த அந்த நாட்கள் அணிவகுக்கிறபோது
ஆனந்தத் தாண்டவம் அல்லவா மறுதலிக்கிறது.
பச்சை அணிகலனாய் புகையிலைக் கன்றுகள் பார்த்த இடமெங்கும் அணிவகுத்து நிற்க.
அதனூடே கோபுரக் கலசமாய் உயர்ந்த அந்த தீவகக் கல்வித் தாயின் காவல்
பெட்டகத்திலே கரங்களில் புத்தகங்களை அடுக்கிய நாட்கள் அலைமோதி விரிகின்றனவே.
கேதாரம் ீநீ வேதாளம் என்ற போதும் ீ நாற்பத்தி ஐந்து பாகையில் திரும்ப நிறுத்தி
நாரியிலே ஜெகநாதன் அடிகள் போட்ட போதும் ஏரியிலே ஊற்றுப்போல அறிவின் செறிவிலே
வேரினைப் பரப்பிய அந்த விருட்சத்தின் காலடி நாட்கள்
கற்பக்கிரகத்துள் தீபங்கள் சுடர்விடும் பொழுதுகளாய்...

அந்தக் கல்விச் சன்நிதியை சொல்லுவதில் இருக்கின்ற ஆனந்தம் சுகங்களாக...

நேற்று எனக்குக் கிடைத்த அந்த ஊற்று அந்த மண்ணில் இன்று அடைக்கப் பட்டிருக்கிறது
என்கிறபோது வேதனைச் சுருள்களால் அப்பிய பந்துகள் என்னை விளாசித் தெறிக்கின்றன.
ஆயின் அடக்கப்பட்டிருக்கும் ஒரு நிலத்தின் சுதந்திரத்துள் எங்கள் கல்லூரித்தாய் மீண்டும்
எழுவாள் என்பதற்கான நம்பிக்கைக் கரங்களாய் இன்று நாம்...

முட்களாய் குத்துகின்ற நெருஞ்சிகளாய் கனடாவில் சில முக்காடுகள் எங்கள் கல்லூரியின்
கால்களுக்குக் கீழேயே பதம் பார்க்கின்றன.
நெருஞ்சிக் குவியலாய் இல்லாமல் எங்கள் அருஞ்சுவைத் தமிழின் அடைக்கலப் பெட்டகமாம்
வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் வேதங்களாக—
மானுடங்களாக ஒரு அணியில் அகம் காணுங்கள். நாளை நமதே.
வாழ்க. வளர்க. என் நல்வாழ்த்துக்கள்.

## சிறப்புற வாழ்த்துகிறோம்.

சூழ்நிலைக் கனப்பினை தாக்காட்டு முகமாக அந்நிய மண்ணில் கால் பதித்த நாமெல்லோரும் விரும்பியோ விரும்பாமலோ மாற்றான் நிலத்தில் மெல்ல வேரூன்றிப் படர ஆரம்பித்திருப்பது தவிர்க்கமுடியாது போய்விட்டநிலையிலும் எம்மால் எமது சமூகத்திலிருந்து விலகி எம்மை சிறைப்படுத்தி விளக்கமற்று வாழ முடியாது. எமது சமூகத்தின் அவலங்களை உட்கிரகித்து ஒவ்வொரு மனிதனும் தன்னால் முடிந்தவரை சூழ்ந்தோர் துயர் களைந்து அனைவரும் மகோதயமாக வாழ அச்சமூகத்தைச் சார்ந்தவர்கள் என்ற உணர்வுடன் களைகண் நல்கி தம்மை ஈடுபடுத்திக் கொள்வது அவசியம். இப்படியான பண்பாட்டுணர்வினைக் கருக்கொண்டு செயல்படும் வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் சிறப்புகள் பல எய்த மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளை தன் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.

திருமதி. ப. கருணைவேல்.
செயலாளர்
மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பாரிஸ் கிளை



படிப்பகம்

www.padippakam.com


# ARRTHI PHOTO STUDIO


புகைப்பட உலகில் ஒரு மறுமலர்ச்சி
எண்ணங்களை வண்ணமயமாக்கும் புகைப்பட நிபுணர்கள்
பாரீசில் அலங்காரங்களுடன் கூடிய சிறந்த ஸ்டுடியோ
கைத்தொலைபேசி இணைப்புகளுக்கும் திருத்தங்களுக்கும்.

**15, rue Cail - 75010 Paris**
**Tel : 01 40 34 20 90**
**M°: Gare du Nord ou La Chapelle**

# THANGAMALIKAI JEWELLERY

**SOLDERIE BIJOUTERIE**

தங்கநகை உலகில் பல வருடகாலம்
மக்களின் நன்மதிப்பை பெற்றவர்கள்



199, rue du Fg. St.Denis,
7510 Paris
M°: La Chapelle

Tél : 01 42 05 39 05
Fax : 01 42 05 39 06




படிப்பகம்

www.padippakam.com

# நெஞ்சில் நிற்கும்

# அமரர் பொ. கேதாரநாதன்



வேலணை மத்தியமகா வித்தியாலயத்தில் பல அதிபர்கள் கடமையாற்றி இருந்தியிருப்பினும் திரு. பொ. கேதாரநாதன் பலரது மனங்களிலும் நிலைத்திருக்கின்றார் என்பது பலருமறிந்த ஒன்று.

இவர் எமது கல்லூரிக்கு மிக அண்மையிலே பிறந்து வளர்ந்து ஆரம்பக்கல்வியை நாவலர் வழிவந்த எமது சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்றார். பின் யாழ் இந்துகல்லூரியில் உயர் கல்வியை மேற்கொண்டார். கல்லூரியில் மாணவ முதல்வராகவும், மாணவ முதல் வரின் தலைவ ராகவும் விளங்கினார். இவரது நுண்ணறிவும் ஆர்வமும், சுறுசுறுப்பும் விஞ்ஞானக்கல்விக்கு அழைத்துச் சென்றது. கொழும்பு சர்வகலாசாலையில் விஞ்ஞான பீடத்தில் கற்கையில் அறிஞர்கள் பெரியவர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்களில் கருத்தரங்குகளில் ஆர்வத்துடன் கலந்து கொள்ளத் தவறுவதில்லை, இதனால் சகல அரசியல். பொருளியல் அறிவினையும் பெற்றுக் கொண்டார்.

வேலணை மேற்கின் முதல் விஞ்ஞான பட்டதாரியாக 58ம் ஆண்டு வெளியேறியவர். 1959 ம் ஆண்டில் யாழ் இந்துக் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்து கொண்டார். அச்சமயம் தீவுப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலணையைச் சேர்ந்தவராக இருந்தமையால் அவரது முயற்சியும் அப்போதைய கிராமசபைத்தலைவரினதும் பக்க பலத்தோடும் திரு. கேதாரநாதன் அவர்கள் இரசாயனவியல் ஆசிரியராகவும், திரு. கோபாலபிள்ளை அவர்கள் கணித ஆசிரியராகவும், திரு. சண்முகநாதன் அவர்களை உயிரியல் ஆசிரியராகவும் நியமித்து 1959 — 11 — 16. அன்று வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் விஞ்ஞானப்பகுதி
ஆரம்பிக்கப்பட்டது. இதில் திரு. பொ கேதாரநாதனின் முயற்ச்சி முக்கிய மாக பயன்பட்டது.

ஆசிரியர்கள் அனைவரினதும் ஊக்கம், வேகம், அக்கறைகளினால் கல்லூரி புதுப்பொலிவுடன் புதுச் சகாப்தத்திற்குள் பிரவேசித்தது.

திரு. கேதாரநாதனின் விடாமுயற்சியும் கண்டிப்பும், நன்நோக்கும் G.C.E ( O.L. ) ( A.L. ) வகுப்புகளில் மாணவர்கள் திறமையாக சித்தி அடைந்தனர். சர்வகலாசாலைக்கும் செல்லத் தொடங்கினர். வேலணை கிராமசபையின் 25 வருடகால தலைவரும்
ஆசிரியமணியுமான இ. மருதையினாரின் இல்லம் பொ. கே. வின் புகுந்த இல்லமாயிற்று.
இது மேலும் அவரது கல்வித்துறைக்கும் பொதுச்சேவையையும் விரிவு படுத்திசெல்ல வாய்ப்பாக இருந்தது.

1965 இல் DIPLOMA பயிற்சியை முடித்தபின் சர்வகலாசாலையின் பாடசாலை சம்மந்தமான கலந்துரையாடல்களிலும் பங்கு கொண்டார். ( O.L. ) ( A.L. ) பரீட்சகராகவும், கல்வித்திணைக்களம் இவரை இரசாயனவியல் செய்முறைப் பகுதிக்கு விஞ்ஞான உயர்தர வகுப்புகளுடனான யாழ் கல்லூரிகளுக்கு



படிப்பகம்

www.padippakam.com

வழிகாட்டியாக நியமித்தது பலரும் மெச்சத்தகுந்த இவரது சேவை வேலணை மாணவர்களுக்குக் கிடைத்தது பெரும் பேறு எனலாம்.

இரசாயனவியல் பாடம் பலமாணவர்களுக்கு கஷ்டமான பாடமாகையால் இவர் பாடங்களைக்கற்பிக்கும் போது புராணக்கதைகள், தத்துவ, கிராமிய கதைகளை உவமைகளாக, உதாரணங்களாக சொல்லி பாடத்தை மனதில் எளிதாகப் பதிய வைத்துவிடுவார். கற்பிக்கும் முறை அலாதியானது. இவரது சேவை இடமாற்றமின்றி எமது கல்லூரிக்குக்கிடைத்தது.
பின்னாளில் கொத்தணி அதிபராக இருந்து மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு, முற்னேற்றத்திற்கு காரணமானார். கல்லூரியில் கோயில் கட்டும் பணியையும் செவ்வனே நிறை வேற்றினார்.

யுத்தத்தினால் கல்லூரி யாழகம் இடம்பெயர்ந்த போதும் அங்கு மாணவர் சமுதாயத்தை ஒன்று சேர்த்து மனம் சோராது உற்சாகமாக இயங்கி கொட்டடி நமசிவாய வித்தியாலத்தில் எமது ம. ம. வித்தியாலயம் இயங்க உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வெற்றியும் கண்டார். தேகாரோக்கியம் குறைந்திருந்த காலகட்டத்தில் மாணவர் கல்விவளர்ச்சிக்கு போட்டிகள்,
பரிசளிப்பு விழாக்கள் பலநடாத்தி ஊக்குவித்தார். நமசிவாய வித்தியாசாலையில் இடம் போதாமையால் நிரந்தரமான இடம் எடுப்பதற்கு பழையமாணவர் சங்கத்தை உருவாக்கி வெளிநாடுகளிலும் சங்கங்கள் உருவாக்கினார்.

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோயில் பணிகளிலும், நிர்வாகத்திலும் தம்மை ஈடுபடுத்தி சமயப்பணிகளைச் செய்யலானார். சங்கத்தில் பல பிணக்குகளையும் தீர்த்துவைத்தார். யாழ் சைவசித்தாந்த வகுப்புகளோடு இணைந்து சமய வகுப்புகளுக்கான, புத்தகங்கள் வெளியிடுவதிலும் வழங்குவதிலும் முன்னின்றுழைத்தார்.

ஓய்வுபெற்றபின் அவுஸ்ரேலியாவில் மகனுடன் வாழலானர். வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து 01 — 11 — 96 அன்று அவுஸ்ரேலியாவில் இயற்கை எய்திய பெருமகன் ஆண்டவனின் பாதாரவிந்தங்களில் சாந்திபெற பிரார்த்திப்போமாக.

**யா. பத்மநாதன்.**
முன்னாள் உற்பத்தி பிரதி இயக்குனர்
இலங்கை ரயர் கூட்டுத்தாபனம்.

பாரிஸ், பிரான்ஸ்

**நாங்கள் எல்லாம் மனிதர்களில்லையா!**

கீரேக்க தேசத்தில் டயோயர்ஸ் என்ற தத்துவ ஞானி பட்டப்பகலில் விளக்கை ஏந்திக்கொண்டு நகரத்து வீதிளங்கும் எதையோ தேடிக்கொண்டிருந்தாராம் இதைக்கண்ட மக்கள் இவருக்கு பைத்தியம் பிடித்து விட்டதென்று எள்ளி நகைத்து வார்த்தைகளால் இம்சித்தனராம்.
எதைத் தேடுகிறீர்கள் ? என்று மக்கள் கேட்டபோது.
''நான் மனிதரைத் தேடுகிறேன்''. என்றாராம்.
''நாங்கள் எல்லாம் மனிதர்களில்லையா ?'' எனத் திரும்ப மக்கள் கேட்டபோது.
«நீங்கள் எல்லாம் மனிதர்களா ? «எனத் திரும்பக்கேட்டுவிட்டு தொடர்ந்து தேடிக்கொண்டிருந்தாராம்.



படிப்பகம்

# KSJ ஏசியன்ஸ்

## இறைச்சிக்கடை & மளிகை ஸ்தாபனம்

ஆடு, மாடு, கோழி, கோழிக்கால், மான், மரை, அனைத்துவகை இறைச்சிவகைகள்
அத்துடன் இலங்கை இந்திய வியட்னாம், தாய்லாந்து, ஆபிரிக்க நாட்டு
மளிகைப்பொருட்கள் இவற்றுடன் இலங்கை, இந்தியமீன்,
நண்டு, கணவாய், இறால் வகைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

ஆட்டு இறைச்சிப்பங்கு ..................69,90
உயிர் கோழி..............................59,90

viandes HALAL

**மலிந்த விலையில் இறைச்சி வகைகள்**
**மளிகைப்பொருட்களுக்கு நாடுங்கள்**

# K.S.J.ASIAN

## BOUCHERIE & ALIMENTATION

40, Boulevard Ornano, 75018 PARIS - M°: Simplon

**Tél: 01 42 58 18 20**

**சனி, ஞாயிறு தினங்களில் பங்கு இறைச்சிகளை**
**பெற்றுக்கொள்ளலாம்**

எமது ஸ்தாபனத்தில் விற்கப்படும் இறைச்சிவகைகள் பிரான்ஸ் அரசின்
தரக்கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டவை

www.padippakam.com

# அந்த நாளை நான் மறப்பேனா ?

துள்ளித் திரிந்த சின்ன பருவத்தில் துடிப்படக்கி பள்ளிக்கு சென்று கல்வி கற்று வா என்ற அனுப்பிய பெற்றோரை நான் மறப்பேனா ?

பள்ளிக்கு போகும் போது பாதி வழியில் நெல்லிக்காய் மாங்காய் பிடுங்கி கொறித்த காலத்தை நான் மறப்பேனா ?

பள்ளிக் செல்லும் வழியில் நெல்வயல் களில் தண்ணீர் விளையாடி நனைந்த உடுப்புடன் சென்று கல்வி பயின்ற காலத்தை நான் மறப்பேனா ?

வகுப் பறைக்கு மதிய உணவு இடை வேளைக்கு வீடு சென்று பிந்தி வந்து கொதியரிடம் வேண்டிய தண்டனையை நான் மறப்பேனா ?

சமய பாடத்தில் வீட்டு வேலைகள் செய்ய வில்லை என்று சின்னமண்டுபத்திடம் மண்டுபம் ஏன் வீட்டு வேலை செய்ய வில்லை என்று வாங்கிய ஏச்சுக்களை வேண்டியும் இவ்வுயர்நிலைக்கு வந்ததை நான் மறப்பேனா ?

இன்னும் எத்தனையோ பல நினைவுகள் என நெஞ்சில் தோன்றினாலும் அத்தனையும் இம்மலரில் எழுத முடியவில்லை.

இத்தனைக்கும் காரணமாய் அமைத்த தெங்கள் தீவகத்தின் ஏககலைக் கூடம் வேலணை மத்திய மகா வித்தியாலயத்தை நான் மறப்பேனா ?

கலைக்கூடம் உருவாக்க மேலோங்க பாடுபட்ட பெரியோர்கள் கனவான்கள் தலைவர்கள் ஆசிரிகளை நான் மறப்பேனா ?

எந்நாடு வந்தாலும் தாய்நாட்டையும் யார் தான் மறந்தாலும் நான் மறப்பேனா ?

பிறந்தநாட்டையும் கற்ற தமிழ் மொழியையும் இறுதிவரை பெற்றோரை பராமரிக்கும் உத்தம புத்திரன் போல் சிங்கள இராணுவத்தின் அத்து மீறிய பிரவவேசத்தால் சீரழிந்த வேலணை மத்திய மகா வித்தியாலையத்தை பழைய உயர்நிலைக்கு முன்னேற்றிவைக்க வேலணை ஊர் மக்கள் மறப்பார்களா ?

வேலணை மேற்கு
**பஞ்சாட்சரம் கந்தப்பிள்ளை**
(Paris - 19 – France)
முன்னாள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தார்

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்ததுவே.



படிப்பகம்

www.padippakam.com

# இந்துமதம் பெண்களை அடிமைப்படுத்தியதா?

இந்து மதம் வாழ்க்கையை ஒரு புனிதமான அனுபவமாகக் கருதுகிறது. குடும்பத்தை வழிபாட்டுக்குரிய கோவிலாக எண்ணுகிறது. ஆலயங்களின் கர்ப்பக்கிருகத்தில் உள்ள தெய்வங்களின் இல்லறக் காட்சி இந்துக்கள் குடும்ப வாழ்க்கைக்கு அளித்த முக்கியத்துவத்தின் சாட்சியாக விளங்குகிறது. வழிபடுகின்ற போதே இல்லற தர்மத்திற்கு வணக்கம் செலுத்துகின்ற மரபும் இதனால் உருவாக்கப்பட்டது. பெண்ணை சக்தியாகவும், அறிவாகவும், செல்வமாகவும் உருவகப்படுத்தி வழிபட்ட இந்து பற்று பெண்ணை வெறுப்பதை ஒரு இயக்கமாக வளர்த்தது என எண்ணுவது பேதமை. புராணக் கதைகளும் இதிகாசங்களும் பல இடங்களில் பெண்ணின் பெருமையைத் தெளிவாக உணர்த்துகின்றன. பெண்ணை இந்து சமயம் வெறுக்கச் சொல்லவில்லை. குடும்பத்தை உதறிவிடவும் சொல்லவில்லை. வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து, வீடு பேறு அடைய வேண்டும் என இந்து மதம் வலியுறுத்துகின்றது.

எப்படியும் வாழலாம் என்பதை எதிர்க்கிறது இந்து மதம். வாழ்க்கையை எத்தகைய நெறிகளோடு வாழவேண்டுமென தெளிவுபடுத்துகின்றது. பெண் அடிமை என்பது இந்து சமூகத்துக்கு அந்நியமான ஒன்று. இடைக் காலத்தில் ஆண் மேலாதிக்கம் தேவை என எண்ணி சில சுயநலக்காரர்களால் இந்து சமூகத்தில் புகுந்த ஒரு கோட்பாடு பெண்ணை ஒதுக்கி வைக்க முற்பட்டது. அதாவது பெண்ணை வெறுத்தல் என்ற போலி வாதம் பிற்காலத்தில் சிலரால் உருவாக்கப்பட்டது. இந்து சமூக அமைப்பில் மனைவி ஒருபோதும் கணவனுக்கு அடிமையாக இருந்ததில்லை. அனைவரும் சமம் என மதிக்கப்படும் ஜனநாயக அமைப்பு கூட நிர்வாகத்தை நடத்திச் செல்ல ஒரு தலைவன் தேவைப்பட்டால், இவ்வாறு குடும்ப அமைப்பு தோற்றுவித்த வலிமை வாய்ந்த தலைவன் தன் கணவன். இதே போல மனைவியும் தலைவி என்று அழைக்கப்படுகின்றாள். ஒரு குடும்பத்தில் ஆணைத் தலைவன் என்றும், பெண்ணைத் தலைவியாகவும் சமப்படுத்துகின்றன பண்டைய தமிழ் இலக்கியங்கள். பெண் புலவர்கள் ஔவையார், காக்கைப்பாடினி, நச்சன்னையார் ஆகியோர் தமது சிந்தனையை வெளிப்படுத்தி தாம் அடிமைகள் அல்ல என நிரூபித்துள்மையையும் பழைய இலக்கியங்களிலே காணலாம்.

மேலும் இந்து மதம் கற்பை அழுத்தமாக வற்புறுத்துகிறது. பெண்ணுக்கு கற்பு தேவை என்று அடித்துச் சொல்லுகிறது. இவ்வாறு கற்பு என்ற அணி பெண்ணுக்கு அவசியம் என கூறுவதால் பெண்ணை அடிமைப்படுத்துவது என அர்த்தம் கொள்ள முடியாது. இதை எதிர்த்து பாரதியார் ஆண்களுக்கும் அவசியம் என்று வற்புறுத்திச் சென்றுள்ளமை இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளது. அன்றைய கால கட்டத்தில் பெண்ணின் கற்பை வலியுறுத்திக் கூறியமைக்கும் அதைக் கட்டுப்பாடகக் கொண்டமைக்கும் சில காரணங்கள் இருந்திருக்கின்றன. அதாவது அன்றைய வளர்ச்சியற்ற சமுதாயத்தில் □பெண்□ தாய்மைக்கு உரியவள் என்று மட்டும் கருதப்பட்டாள். அப்படியானவள் கற்புடன் இருந்தால் மட்டுமே தான் தந்தையை அடையாளம் காட்ட முடியும். உடலமைப்பு நிலையை வைத்தே இந்த ஒழுக்கம் பெண்களின் பக்கம் வற்புறுத்தப்பட்டது. இவ்வாறாகத் தோற்றம் பெற்ற இந்தக் கற்பு ஒழுக்கம் பின்னர் பெண்ணை அடக்கி ஒடுக்கும் ஆயுதமாகவும்



படிப்பகம்

www.padippakam.com

ஆணுக்கு அது இல்லை என்பதாலும் ஆண்கள் மேலானவர்கள் என்ற ஒரு மூடக் கொள்கை அன்று தோற்றம் பெற்றது. இந்த அடக்கு முறையை இந்து மதம் போதிக்கவில்லை. ஆனால் இந்து மதத்தைப் பின்பற்றிய சிலரால் இடைச் செருகலாக இவை செருகப்பட்டமையால் பாரதி காலம் வரை தொடர்ந்து இன்றும் பெண்ணடிமைத் தனம் பேசப்படுகின்றது.

கணவன் மனைவியின் அன்பும் பாசமும் குடும்பத் தேவைக்கு அச்சாணியாக இருக்கிறது. இங்கே கணவனுக்கு மனைவி அடிமை என்று இந்து மதம் கற்பிக்கவில்லை. காரணம் அறிவுக் கடவுள் சரஸ்வதி பெண் என்றும், செவல்வத்துக்கு லட்சுமி கடவுள் என்றும் வீரத்துக்கு துர்க்கை என்றும் பூமியைப் பூமாதேவி என்றும் சோற்றை அன்னலட்சுமி என்றும் இந்த உலகில் உள்ள சக்தியை உலகமாதா என்றும் பெண்களையே உருவகப்படுத்திப் போற்றும் பண்பு இந்துக்களிடையே உண்டு. சிவபெருமானும் உமாதேவியும் சமமாகச் சேர்ந்துள்ள அர்த்தநாரீஸ்வரர் என்ற உருவம் இங்கே சிவன் இன்றி சக்தி இல்லை, சக்தி இன்றி சிவம் இல்லை இரண்டும் சேர்ந்தே இருக்க வேண்டும். இரண்டும் பாதிபாதியாக இருக்கவும் சமானமாக இருக்கவும் என்பதைப் போதிப்பதாக அமைந்திருக்கின்றது. ஆகவே இக் கருத்துகள் மூலம் இந்து மதம் பெண்ணும் சமத்துவமாக வாழ வேண்டும் என்பதை வலியுறுத்தி இருக்கின்றது. அவள் அடிமையாக இருக்கவேண்டுமென்று எந்த இடத்திலும் சொல்லவில்லை.

குடும்பத் தலைவனின்கடமை, குடும்பத் தலைவியின் கடமை ஆகியவை சரிவர நிறைவேற்றப்படும் போது, அவர்களின் உரிமைகளும் தெளிவாகவே வரையறுக்கப்பட்டுவிடுகின்றன. கடமைகளைச் சரிவரச் செய்து ஒருவருக்கொருவர் பரஸ்பர உரிமைகளை மதித்து வாழ்க்கை நடத்துவதுதான் குடும்பம். எனவேதான் இந்து மதத்தினர் குடும்பத்தை கோயிலாகவும் பல்கலைக் கழகமாகவும் போற்றி வருகின்றனர். இதிகாச நூல்களும் இதையே சொல்கின்றன.

உலகம் முழுவதும் பெண் தெய்வங்களை வணங்கும் வழிபாடு பண்டைக்காலத்தில் பரவியிருந்திருக்கின்றது. கிறீஸ், பபிலோனியா, எகிப்து, இந்தியா போன்ற நாடுகள் இவற்றுக்கு உதாரணமாக இருந்திருக்கின்றன. காட்டுமிராண்டிக் காலத்திலிருந்து மாறி, பின் நாரீகம் தொடங்குவதற்கு முற்பட்ட விவசாயக் காலத்தின் போது பெண் தெய்வ வழிபாடும் பெண்ணாதிக்க சமுதாயமும் இருந்திருக்கின்றன. பெண்கள் அன்றைய ஜீவாதாரத் தொழிலான விவசாயத்துக்கு முன்னணியில் இருந்தார்கள். சொத்துக்ளையும் பிள்ளைகளையும் கவனமாகப் பேணினார்கள். இதனாலே அவர்களுக்கே தலைவி ஸ்தானம் வழங்கப்பட்டது. செழிப்பைத் தருவதால் சக்தியாகவும் அவர்கள் கருதப்பட்டார்கள். பின் காலம் செல்லச் செல்ல அச் சக்தியைப் பெண் தெய்வமாகவே உருவகம் செய்தனர். அத்துடன் தமக்கு அன்றாடம் உதவி, ஆத்மாப் பசியை தீர்த்த பொருட்களைகவும் சக்தியாகவே எண்ணினர். இவ்வாறாக அன்று பெண்ணாதிக்க சமுதாயம் இருந்திருக்கிறது என்பது தெளிவாகின்றது. காலம் செல்ல, உடல் வலிமை பெற்ற ஆண்களால்தான் புறத்தேயுள்ள இயற்கையான எதிர்ப்புகளையும், மிருகங்களின் தாக்கங்களையும் போரிட்டு அல்லது அழித்து மனைவியையும் பிள்ளைகளையும் பாதுகாக்க முடிந்தது. உடல் வலிமை, உடற்கூறுகள் ஆண்களை உயர்த்தி வைக்க முற்பட்ட போது பெண் வழிச் சமுதாயம் ஆண்வழிச் சமுதாயமாக மாறியது. அவ்வாறிருந்தும் சங்க காலத்தில் உள்ள □கொற்றவை வழிபாடு□ பெண்ணாதிக்கம் இருந்தது என்பதும் பெண்ணைத் தெய்வமாக மதித்தனர் என்பதும் தெரியவருகிறது. இவற்றுக்குச் சான்றாக சிந்து வெளி நாகரீகத்திலே உள்ள மொகைஞ்சதரோ, ஹரப்பா முதலிய கல்வெட்டுக்கள் இருக்கின்றன.

எனவே பெண்ணடிமை என்பதும் இந்து மதமும் ஒன்றுடன் ஒன்று ஒருபோதும் இணைந்திருக்கவே இல்லை. இவ்வாறு இந்து மதம் சொல்லாத ஒன்றை மதத்துடன் இணைத்துக் கூறிய சிலர் தமது சுயநலத்துக்காகவே இவ்வாறு செய்துள்ளனர் எனத் ரிெந்துகொள்ள முடியும். பெண்ணொடுக்கு முறையை உருவாக்கி ஆண்களை மேலாக மதித்துப் பேசும் பண்பு கூடுதலாக கீழைத் தேசங்களிலே பரவலாக உண்டு. இன்று இவை உடைத்து எறியப்பட்டுக் கொண்டிருந்தாலும் இன்னும் உடையாமல் பல இடங்களில் இருக்கின்றன. பொதுவாக நாம் நோக்கின் இந்து மதத்தில் பெண்ணடிமைத் தனம் இல்லை என்றும் அது இடையில் வந்த சிலராலே மதத்துடன் தொடர்பு படுத்தி புனையப்பட்டுள்ளது என்றும் கூற முடியும்.

**விக்னா பாக்கியநாதன் B.A.**
*பழைய மாணவி, ஆசிரியை*
*ஜேர்மனி*



படிப்பகம்

www.padippakam.com

# காலைப் பொழுது

—விக்டர் குகோ

மலைகளில் ஒளிந்திருந்த
கதிரவன் மெல்ல எட்டிப் பார்க்கிறான்
அவனுடன் கூட
காலைப்பொழுதும்
ஆரம்பமாகிறது.

கதிரவன் கதிர்பட்டு
கோபுரங்கள் பிரகாசிக்கின்றன.
இருண்டு கிடந்த வானம்
மெல்லத் தெளிகின்றது
காலைப் பொழுதின் புகழால்
உள்ளம் உவகையடைகின்றது.

காலைப் பொழுதை வரவேற்று
மரங்கள் தங்கள் தங்கள் கிளைகளை சிலிர்ப்பி
இலைகளை அசைத்து
முதல்ப் பாடலைப் பாடுகின்றன.

ஆம்
காலையின் புன் சிரிப்பில்
வானம் தன்னைத்தானே
மெருகூட்டிக் கொள்கிறது.

நாளை சில வேளை
நான் இல்லாமல் போயிருக்கலாம்
என்னைக் காணாமல்
ஏமாறலாம்.

ஆனாலும்
வெளிச்சம் தரும் சூரியனால்
உன் ஏமாற்றம் இல்லாமல்ப் போகும்

நாளையும்
இதே பறவைகள்
இதே விடியற் காலையில்
என் கல்லறையின் மேல்
நின்று பாடக் கூடும்
ஆனாலும் அது
என் காதுகளுக்கு கேட்காமல்ப் போகும்.

ஆனாலும்
நீ
அதைக் காண்பாய்.....
ஆரம்பமும் முடிவுமில்லா
காலைப் பொழுதிலே
நாம்
வாழ்க்கைப் பயணத்தில்
காலடி எடுத்து வைத்தோம்.
இவ்வளவு காலமும்
எம் வாழ்க்கை
ஓர் இருண்ட இரவைப் போலவும்
ஓர் தெளிவில்லா கனவைப் போலவுமிருந்தது.
ஆனால்
இன்னொரு காலைப் பொழுதில்
இன்னொரு தொடுவானத்தில்
என்னுடைய
ஆத்மா
மகிழ்ச்சியாய் இருக்கும்.
என் எதிரே
ஓர் அளவில்லா எதிர்காலம்
தோன்றியிருக்கும்.

நன்றி - தூரத்து விடிவெள்ளி.
இக் கவிதை பிரெஞ்சுக் கவிஞர் விக்டர் குகோ வால் ஆயிரத்து எண்ணூற்று இருபத்தியிரண்டாம் ஆண்டு ஏப்ரல் மாதம் எழுதப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

# மணிவிழா நாயகன்



எமது கல்லூரியின் பழையமாணவரும்,
அதிபருமான கல்வியாளர்
திருமிகு. காராளபிள்ளை அவர்களுக்கு
பாரிஸில் வாழும் கல்வியாளர்களும்,
கலைஞர்களும் சென்ற ஆண்டு மணிவிழா
எடுத்துச் சிறப்பித்தனர். எம்மைப்
பெருமைகொள்ள வைக்கும் இந் நாயகனை,
எமது காப்பாளரை நாமும் வாழ்த்துகிறோம்.

# வாழ்த்துகிறோம்

கல்வியின் முக்கியத்துவம் என்பது மனிதர்களின் உயிர் மூச்சு. கல்வி இல்லாத சமூகம் இவ்வுலகத்தில் உயர்ச்சி பெற முடியாது. இன்று எம் தேசத்தில் கல்வி அழிக்கப்பட்டுக்கொண்டே வருகிறது. இந் நிலை தொடர்ந்தால் எதிர்கால எம் சமூகம் வெறும் முண்டங்களாகவே வாழவேண்டி ஏற்படும். எனவே வெளி நாடுகளில் வாழும் மக்களாகிய எங்களுக்கு எம் தேசத்து சிறார்களின் கல்வியின் மேம்பாட்டுக்கான பொறுப்பு இருக்கிறது என்பதை மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு பெற்றோரும் தங்களது பிள்ளைகளை சிறந்த கல்விமான்களாகவும் விஞ்ஞானிகளாகவும் தொழில்நுட்பவியலாளர்களாகவும் நல்ல மனிதர்களாகவும் உருவாக்கி, அழிந்துகொண்டிருக்கும் எம் தேசத்தைக் காப்பாற்றி சகல வழிகளிலும் உயர்ச்சிபெற நாம் உழைக்க வேண்டும். இப் பணிக்கு பழைய மாணவர் சங்கங்களின் பங்களிப்பு மிக மிக அவசியமாகும். அந்த வகையில் வேலணை மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் எடுத்து வரும் முயற்சிக்கு எங்கள் கல்லூரி சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமைப் படுகின்றோம்.

கு. முத்துக்குமார்
தலைவர்
யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்
பிரான்ஸ் கிளை



படிப்பகம்

www.padippakam.com


உங்கள் வீட்டில் நடைபெறும் சகலவிதமான
மங்களகர வைபவங்களை
நவீன தொழில் நுட்பமுறையில் வீடியோ மற்றும் புகைப்படம் பிடித்துக்கொள்ள
நாடவேண்டிய இடம்

ஸ்ரார் வீடியோ மூவிஸ்



சதீஷ்
(வேலணை ம.ம.வி. பழையமாணவன்)

தொடர்புகளுக்கு 01 44 93 02 16
01 46 67 04 56
06 14 09 06 49




வாழ்க்கை ஒரு ரயில்வே ஸ்டேசனை போல். யார் யாரோ வரு வார்கள் போவார்கள் ஒவ்வொருவரையும் கவனித்துக் கொண்டிருந்தோமானால். நமது பயணம் நடைபெறாது.

— ஜேர்மனி

தேன்!தேன் என்று மொழிவதால் பொய் இனிமை பெற்றுவிடாது

— துருக்கி

பொய் சொல்லி பரிசுபெறுவதைவிட
உண்மையைச்சொல்லி பரிசுபெறுவது மேல்

— சுவீடன்

பேசாமலிருக்கும் பைத்தியக்காரன் ஞானியாகக் கருதப்படுவான்

— பிரான்ஸ்



படிப்பகம்

# SRI MAHALL

**Alimentation**
**Produits Asiatiques**

**ஆசிய மரக்கறிகள், இலங்கையிலிருந்து இறக்குமதியாகும்**
**மண்மணம் வீசும் மரக்கறிகள் மற்றும் மளிகைப்பொருட்கள்**
**வீடியோ, ஓடியோ கசற்றுக்கள்**
**வாடகைக்கும் விற்பனைக்கும்**
**லாச்சப்பலில்**

# ஸ்ரீ மகால்

பலர் நாடும் மளிகை ஸ்தாபனம் ஸ்ரீ மகால்
நேற்றும் இன்றும் நாளையும் என்றென்றும்
நெஞ்சில் நிற்கும் மளிகை ஸ்தாபனம்

**SRI MAHALL**

**197, rue du Fg.Saint Denis, 75010 Paris**
**Tél: 01 46 07 83 12**
**M°: La Chapelle ou Gard du Nord**

www.padippakam.com


திருமண விழாக்களா, பூப்புனித நீராட்டுவிழாக்களா,
பிறந்தநாள் வைபவங்களா,மேடை நிகழ்ச்சிகளா
இசைமழையில் நனைந்து மகிழ
ஐரோப்பா புகழ் இசைக் குழு

பாரிஸ் **ஈழநிலா**

தொடர்புகளுக்கு:
எஸ். எஸ். தில்லைச்சிவம்
(வேலணை ம.ம.வி. பழைய மாணவன்)
தொலைபேசி : **01 40 37 56 69**



# கவிதாஸ்

**பல்பொருள் அங்காடி - பலசரக்கு மளிகை**

உடனுக்குடன் தருவிக்கப்படும் மரக்கறிவகைகள், கடலுணவுப்பொருட்கள்,
சீடி, வீடியோ கசற்றுக்கள்
அனைத்தும் நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**80, Bld BARBES, 75018 PARIS**
**M°: Marcadet Poissonniers**
Tél. 01 53 41 09 45 Fax. 01 53 41 09 46




படிப்பகம்

www.padippakam.com

# மழலைகளின் எதிர்கால வாழ்வுக்கு ஒளியேற்றுவோம் !



புலம் பெயர்ந்து இம் மண்ணின் இயந்திர வாழ்க்கையிலும் சுகமான கனவுகளாக நாம் தொலைத்த நாட்கள் நினைவில் வருகின்றன.

பிறந்த மண், வளர்ந்த கிராமம், படித்த பாடசாலை, போதித்த ஆசிரியர்கள், உடன் பழகிய நண்பர்கள் என்று உறவுகள் விரிந்து கிடந்த காலங்களை எப்படித்தான் மறக்க முடியும்.

வித்தாக முளைத்து துளிர்விட்டுத் துள்ளித் திரிந்த காலத்தில் நல்ல நெறியூட்டிய எமது கல்வி நிலையங்களை மறந்து விட்டால் பெற்ற தாயை மறந்தது போலாகும்.

இன்று இந்த அந்நிய மண்ணிலும் ஏதோ ஒரு துறையில் பெயர் சொல்லும்படியாக எம்மை எல்லாம் ஆளாக்கிய எமது வேலணை மத்திய மகா வித்தியாலயத்தை எப்படித்தான் மறக்க முடியும்?

இந்த பசுமையான நினைவுகளும் இன்றைய யுத்தத்தின் கோரப்பிடியினால் சிதறுண்டு போய்க்கொண்டிருக்கிறது. இந்த அவலமான எம் மண்ணின் நிகழ்வுகளில் இழந்துவிட்ட எம் மண்ணின் சின்னஞ் சிறுசுகளின் எதிர்காலத்தை எப்படித்தான் ஈடு செய்யப் போகின்றோம்?

கல்லெறிந்து கலைக்கப்பட்ட தேன்கூடு போல் சிதறிப்போன எம் கல்லூரியின் குழந்தைகளுக்கு இம்மண்ணில் வாழும் நாம் என்ன செய்யப் போகின்றோம்? எதிர்கால வாழ்வுக்கு ஒளியேற்றும் பொறுப்பை நாமும் இந்த நன்னாளில் சூளுரைத்து ஏற்றுக்கொள்வோம்.

**சிவகுரு பாலச்சந்திரன்**
*நிர்வாக இயக்குனர், ஈழநாடு*

---

## வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சுவாமி ம. ம. வி.
## பழைய மாணவர் சங்கம் – கனடா

***Velanai Sir. Waitialingam Duraiswamy M.M.V.***
***Old Students' Association – Canada***

202-25 Brucewood Cres. North York, ON M3A 3C9, Canada

ஆனி 24, 1998

தலைவர்/செயலாளர்
வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி ம.ம.வி. பழைய மாணவர் சங்கம்
பிரான்ஸ்
அன்புடையீர்!

வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைச்சுவாமி ம.ம.வி. பழைய மாணவர் சங்கம் — கனடா சார்பில் ஐந்து வருட பூர்த்தியை கொண்டாடும் தங்கள் சங்கத்திற்கு இவ் வாழ்த்துச் செய்தியை வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நீங்கள் எங்கு வாழ்ந்தாலும் எம்மை எல்லாம் நல்ல நிலைக்கு உருவாக்கிவிட்ட எமது பாடசாலையின் நலன்களில் அக்கறை கொண்டு செயற்படுவதோடு, பிரான்சில் உள்ள பழைய மாணவர்களை எல்லாம் ஒன்று சேர்த்து வெ் வித்தியாலய விழாவை சிறப்புற நடத்துவதற்கும் «வித்தியாலயம்» என்ற மலரை வெளியிடுவதற்கும் எமது பாராட்டுகள். உங்கள் பெரும்பணி தொடரவேண்டும்இ உங்கள் விழா சிறப்பாக நடைபெற இறைவனை வேண்டி மீண்டும் எனது வாழ்த்துக்களை கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்
பா. யோகநாதன்
தலைவர் ப. மா. சங்கம் — கனடா



படிப்பகம்

www.padippakam.com


# கிருஷ்ணா அச்சகம்

10வது ஆண்டு

குறித்த தவணை

நியாய விலை

தரமான வேலை

சகல விதமான உங்கள் அச்சுப்பதிப்பு வேலைகளோடு
மொழிபெயர்ப்பு வேகைளும் செய்து தரப்படும்.

மொழிபெயர்க்கப்படும் உங்கள் ஆவணங்கள் ஐந்து ஆண்டுகள் எங்கள்
கொம்பியூட்டர்களில்
பாதுகாத்தும் வைக்கப்படுகிறன.

தொடர்புகளுக்கு

*Imprimerie Krishna*

**73, Rue Doudeauville, 75018 Paris.**
**M°: Marcadet Poissonniers / Château Rouge**
**Tél : 01 42 51 29 92  Fax: 01 42 51 35 25**




படிப்பகம்

www.padippakam.com


அன்பான வரவேற்புக்கு பாரீஸ் லா சப்பலில்...

RESTAURANT SHALINI

சாலினி உணவகம்

23, rue Cail - 7505 PARIS
Tél: 01 40 34 20 72
*M°: La Chapelle ou Gare du Nord*

TAMARAI

*S.A.R.L*

**IMPRIMERIE - OFFSET - TYPO**

தரமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு

ஸ்ரீ பாரதி அச்சகம்

18, rue Cail - 75010 Paris
Tél: 01 42 05 46 04 - Fax: 01 42 05 46 36
M°: Gare du Nord ou la Chapelle




படிப்பகம்

www.padippakam.com


# KUMAR'S SHOP

## குமார்ஸ்

தரமான ஆடைத் தெரிவுகளுக்கும்
நகைத்தெரிவுகளுக்கும் குமார்ஸ்

KUMARS SHOP
80, bd Barbes, 75018 Paris
Tél: 01 42 59 35 10
Fax: 01 42 59 35 00

K.T.C Jewellery
193, rue Fg. st. Denis
75010 Paris
Tél: 01 42 05 41 36

கொமிசன் இல்லாத நாணய மாற்றுக்கு

**SINGAPORE EXCHANGE CO.**
38, rue de Saint Quentin 75010 Paris
Tél: 01 48 74 48 21
Fax: 01 49 70 06 32

**SINGAPORE EXCHANGE CO.**
*90 Bd Rochechouart, 75018 Paris*
*Tél: 01 42 23 03 10*


படிப்பகம்